

# Salve Regina

ஆகஸ்ட் 2009 மலர்: 1 இதழ்: 1



கன்னிகையான முத்திபேறுபெற்ற மரியாயிக்கு வணக்கமாக இத்திருநாளைக் கொண்டாடுகிற எல்லோரும் ஆண்டவரிடத்தில் அகமகிழ்வோமாக; அவள் பரலோகத்திற்கு எழுந்தேற்றம் செய்யப் பட்டதைப்பற்றி சம்மனசுக்கள் ஆனந்தித்து, சர்வேசுரனுடைய திருக்குமாரனை புகழ்கின்றார்கள்.(பிரவேச கீதம்)

Salve Regina

"கத்தோலிக்கப் பத்திரிகைகளை வெளியிட்டு நேரிய கருத்துள்ளவர்களுக்கு வழங்கினால் மட்டும் போதாது; அனைவராலும் அவை வாசிக்கப்படும்படியாக முடிந்தவரையில் அவற்றைப் பரப்புவதும், குறிப்பாக அவர்களிடமுள்ள நச்சுக் கலந்த தீய புத்தகங்களை, கிறீஸ்தவப் பிறர்சிநேகம் தவறாமல் அகற்றியெறிவதும் அவசியமாகும்."

– பாப்பரசர் அர்ச். 10–ம் பத்திநாதர்.


**ஆசிரியர் & வெளியீடுவோர்**

சங். வளன் D. ராஜகுமார்

**உதவி ஆசிரியர்**

திரு. P. பிரான்சீஸ் குமார்

**கட்டுரையாளர்கள்**

சங். ஜோஸப் ஃபைஃபர்
Dr. S. வின்ஸெண்ட்
திரு. L.M. அந்தோணி
திரு. P. J. டேவிட்.
Dr. R. அருள் ஞானராஜ்

**வடிவமைப்பு**

T.V. ரொசாரியோ

**விநியோகம்**

திரு. P. போத்திராஜ்
திரு. R.P. இருதயராஜ்
திரு. M. இன்னோசென்ட்
திரு. A. கிளமெண்ட்
திரு. T. வின்ஸெண்ட் ராய்ஸ்
திரு. C. சந்தானராஜ்
திரு. R. பயஸ் ஜெபசிங்
திரு. R. மிக்கேலஸ்
திரு. G. அருள் மரிய விக்டர்



**நன்கொடைகள், கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

Rev. Fr. Valan Rajakumar
'Salve Regina'
Marcel Lefebvre Place
8A/3, Annie Nagar
Seevalaperi Road
Palayamkottai - 627002.
✆ 0462 - 2586201 ; 2572389.
Mobile: 94426 25158.



**அச்சிடுவோர்**

மாதாவின் சூசை அச்சகம்
தூத்துக்குடி – 2


சேசுக்கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

இன்று கத்தோலிக்கத் திருச்சபையில் அதன் பாரம்பரிய விசுவாச சத்தியங்களும், வழிபாடுகளும் மறைக்கப்பட்டு, அழிக்கப்பட்டு வருகின்றன. இவை நவீனத் திருச்சபையின் அதிகாரிகளால் வெறுத்து ஒதுக்கப்பட்டு வருகின்றன. இத்தனைக்கும் 2007-ம் ஆண்டில் பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பர் பாரம்பரிய திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை நிறைவேற்ற அனைத்து குருக்களுக்கும் உத்தரவு அளித்து வெளியிட்ட "சுமோரும் போன்திஃபிக்கும்" (Summorum Pontificum) என்ற தன்னிச்சையான மடலுக்குப் பின்னரும்கூட இந்த அவலம் நீடிக்கின்றது என்பதுதான் வேதனைக்குரிய ஒன்றாகும்.

இது சம்பந்தமாக தமிழக ஆயர்களின் பேரவை (-நமக்கு கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவல்களின்படி) பாப்பரசரின் இம்மடலைக் குறித்து **மௌனம்** காப்பது என்று ஏகமனதாக முடிவெடுத்துவிட்டதாகத் தெரிகிறது. ஆயினும் தங்கள் விசுவாசத்தில் உறுதி பெற்ற சில விசுவாசிகள் பாப்பரசர் வழங்கிய மடலின் உரிமையின்படி பாரம்பரிய திவ்விய பலிபூசையை விண்ணப்பித்து ஆயரை அணுகினால், அவர்களை அலட்சியம் செய்து விரட்டும் போக்கு உள்ளது. அவர்களை "சாபம் போட்டு" அச்சுறுத்துவது அல்லது "உனக்கு லத்தீன் தெரியுமா? தெரிந்தால் அங்கே (-அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபையின் பூசை மையங்களைச் சுட்டிகாட்டி) போ" என்று நய்யாண்டி செய்து அவமதிப்பதும் நடைபெறுகிறது. "சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி இடங்கொடுக்க மாட்டான்" என்று நம்மிடையே வழங்கிவரும் பழமொழிக்கேற்ப இன்று திருச்சபையின் அதிகாரிகளின் செயல்பாடு உள்ளது. ஆனாலும் உலகெங்கிலும், ஆங்காங்கே விசுவாசமுள்ள கத்தோலிக்கர்கள் தங்களின் விசுவாசத்தையும், பாரம்பரிய திவ்விய பலிபூசையையும் காப்பாற்ற போராடி வருகிறார்கள் என்பது ஆறுதலானது.

இந்த நவீன அதிகாரிகளின் விதண்டா வாதங்களுக்கெல்லாம் மறுப்பு சொல்ல நமக்கு போதிய நேரம் இல்லாததால், பிரேசில் நாட்டு சில விசுவாசிகள் கேட்ட கேள்விகளுக்கு அண்மையில், 2009, ஜுலை 18-ம் நாளன்று வத்திக்கானிலிருந்து விசுவாச சத்தியங்கள் சம்பந்தமான திருச்சங்கத்தின் அதிகாரியும், "எக்ளேசியா தேயி" கமிஷனின் செயலாளருமான வந். கௌதியோ போஸ்ஸோ ஆண்டகை Protocol 97/9 மூலம் வெளியிட்ட பதில்களை பகிரங்கப்படுத்துவது பயன் விளைவிக்கும் என்று நம்புகிறோம். (காண்க: பக்கம் 3 & 4).

அன்பார்ந்த விசுவாசிகளே! உள்ளம் கலங்க வேண்டாம், தளர வேண்டாம். நமது திருச்சபைப் பற்றிய நமது வேதனைகளையும், ஆவல்களையும் திருச்சபையின் சிரசாயிருக்கிற நமதாண்டவரிடம், திருச்சபையின் தாயான மகா பரிசுத்த கன்னிமரியாயிடமும் ஒப்புக்கொடுங்கள். தொடர்ந்து பக்தியுடன் ஜெபமாலைகளை ஜெபித்து ஜெபமாலை போரில் தீரமுடன் ஈடுபட்டு உலகில் மரியாயின் மாசற்ற இருதயத்தின் வெற்றியை விரைவில் கொண்டுவர முயலுவோமாக!

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**
**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை,**
பாளையங்கோட்டை.

Summorum Pontificum

Ecclesia Dei

PONTIFICIA COMMISSIONE "ECCLESIA DEI"

PONTIFICIA COMMISSIO
« ECCLESIA DEI »

N. 97/09

Vaticano, 18 de julho de 2009.

Ilmo. Sr.

Às questões da sua missiva de 29 de abril p. p., responde-se, no teor do *Motu Proprio "Summorum Pontificum"*, quanto segue:

1 – O documento pontifício não prevê uma permissão especial do bispo diocesano para que algum sacerdote celebre a santa Missa na forma extraordinária (art. 2);

2 – Os fiéis não são obrigados a ter vastos conhecimentos da língua latina, bastando um missal bilíngue ou qualquer folheto;

3 – O número de fiéis do grupo estável depende muito das circunstâncias locais, as quais mostrarão se um sacerdote possa ou queira, apesar dos seus encargos pastorais, se ocupar de um grupo relativamente pequeno;

4 – O bispo diocesano deve estar de acordo com as diretivas do documento pontifício (art. 5, par. 1: e CIC c. 392); outra coisa é verificar a efetiva praticabilidade, de acordo com o que prevê o *Motu Proprio;*

5 – Os fiéis que não fazem parte do "grupo estavel" podem, evidentemente, participar da santa Missa na forma extraordinária;

6 – Os matrimônios segundo a forma extraordinária são possíveis, de acordo com o pároco (art. 9, par. 1);

7 – Quanto à aplicação ampla do documento pontifício numa diocese, basta seguir as indicações do mesmo documento,

8 – Quanto ao ensino de latim nos seminários, conferir a regra sempre válida do atual Código de Direito Canônico: ***Can. 249*** — *Institutionis sacerdotalis Ratione provideatur ut alumni non tantum accurate linguam patriam edoceantur, sed etiam* ***linguam latinam bene calleant*** *necnon congruam habeant cognitionem alienarum linguarum, quarum scientia ad eorum formationem aut ad ministerium pastorale exercendum necessaria vel utilis videatur.*

Em todas as questões ulteriores, sempre se citará o documento pontifício, sendo o Santo Padre a suprema autoridade eclesiástica, a quem, por instituição divina, somos ligados por amor, respeito e obediência.

Queira aceitar, sr. , os meus protestos de viva estima e consideração no Senhor,

Mons. Guido Pozzo
*Secretário*

Ilmo. Sr.

BRASILE

Pontificia Commissione "Ecclesia Dei" – 00120 Città del Vaticano – Tel. 06.698.85213 – Fax 06.698.83412



**மிக சங். கௌதியோ போஸ்ஸோ**
**செயலாளவர், 'எக்ளேசியா தேயி'.**

வத்திக்கான் விசுவாச சங்கத்தின் அதிகாரியும் லாத்தரன் பாப்பரசர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரு மான மிக சங். கௌதியோ போஸ்ஸோ, சமீபத்தில் 'எக்ளேசியா யூனித்தாத்தம்' என்ற பாப்பானவருடைய தன்னிச்சை மடலின் மூலமாய் வத்திக்கான் விசுவாச சங்கத்தோடு இணைக்கப்பட்ட 'எக்ளேசியா தேயி' கமிஷனின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் திரியேஸ்த் மேற்றிராசனத்தைச் சார்ந்தவர்.

பாரம்பரிய விசுவாசத்தை கடைபிடிப்பதற்கும், திவ்விய பலிபூசையை காண்பதற்கும் கத்தோலிக்க விசுவாசிகள் அனுபவித்து வரும் கஷ்டங்கள் அநேகம். இக்கஷ்டங் களை நிவர்த்திக்க அநேகர் தங்கள் ஜெபதவங்களாலும், நியாயமான கோரிக்கைகளை பரிசீலிக்கும்படி திருச்சபை அதிகாரிகளிடத்தில் விண்ணப்பிப்பதாலும் முயற்சிக்கி றார்கள். அவ்வித முயற்சிகளில் ஒன்று, கடந்த ஏப்ரல் மாதம் பிரேசில் நாட்டைச் சேர்ந்த சில விசுவாசிகள் கடிதத்தின் மூலமாக கேட்ட கேள்விகளுக்கு, எக்ளேசியா தேயி கமிஷனின் செயலாளரான மிக சங். கௌதியோ போஸ்ஸோ சுவாமிகள் ஜூலை 18, 2009 அன்று வத்திக்கானிலிருந்து Protocol 97/9 மூலம் தந்த விளக்கங்களை, வாசகர்களின் வசதிக்காக கேள்வி பதில் வடிவத்தில் ஒன்றின்பின் ஒன்றாக வரிசையாகத் தந்துள்ளோம். (ஆசிரியர்.)

**1. பாப்பானவருடைய தன்னிச்சை மடல் சுமோரும் போன்திஃபிக்கும் (Summorum Pontificum) அமலுக்கு வந்த பிறகு பாரம்பரிய திவ்விய பலிபூசையை** (பாப்பானவருடைய மடலில் இதற்கு **அசாதாரணமான முறை** 'Extraordinary Form' என்று அழைக்கப்படுகிறது – ஆர்.) **செய்வதற்கு எந்த குருவாகிலும் மேற்றிராசன மேற்றிராணியாருடைய அனுமதி பெறவேண்டுமா?**

**பதில்:** *பாப்பானவருடைய மடல் (Summorum Pontificum) ஒரு குருவானவர் பாரம்பரிய திவ்விய பலிபூசையை செய்வதற்கு மேற்றிராணியாரின் அனுமதியைப் பெறவேண்டுமென்ற தேவை இருப்பதாக கருதவில்லை.*

**2. லத்தீன் பூசையைக் காண்பதற்கு விசுவாசிகள் லத்தீன் மொழி நன்றாய் அறிந்திருக்கவேண்டுமா? அல்லது பூசைப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பு அடங்கிய சிறு பிரசுரங்களை வைத்திருந்தால் போதுமா?**

**பதில்:** *விசுவாசிகள் லத்தீன் மொழியை நன்கு அறிந்திருக்கவேண்டிய தேவையில்லை. பூசைப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பு அடங்கிய சிறு பிரசுரங்களையோ அதற்கொத்த ஏனைய புத்தகங்களையோ வைத்திருந்தாலே போதும்.*

**3. குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட விசுவாசிகளின் குழு (உதாரணமாக 8 பேர்), அது நிலையானதாயிருந்தாலும், பாரம்பரிய பலிபூசையை நிறைவேற்றுவதற்கு அது போதுமானதாகவில்லையோ?**

**பதில்:** *அங்கேயிருக்கும் சூழ்நிலைக்குத் தக்கவாறு மாறுபடும் நிலையான குழுவிலுள்ள விசுவாசிகளின் எண்ணிக்கையானது, ஒரு குருவானவர் அவருடைய மேய்ப்பு அலுவல்களின் மத்தியில் இச்சிறிய குழுவின் தேவைகளை கவனித்துக்கொள்ள முடியுமா என்பதை நிர்ணயிக்கும்.*

**4. நிலையான விசுவாசிகளைக் கொண்ட குழு விண்ணப்பிக்கும் பாரம்பரிய பலிபூசையை செய்விப்பதற்கு மேற்றிராணியாரின் ஒத்துழைப்பது அவசியமா?**

**பதில்:** *பாப்பானவருடைய மடலில் (art.5 par.1 மற்றும் CIC c.392) கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை மேற்றிராணியார் ஏற்றுக்கொள்ள வேண்டும். தன்னிச்சை மடலினுடைய வழிமுறைக்கு ஏற்றதாக, செம்மையாக நடைமுறைப்படுத்துதலை சரிபார்ப்பது வேறொன்று.*

**5. நிலையான குழுவைச் சாராத விசுவாசி பாரம்பரிய திவ்விய பலிபூசையைக் காணலாமா?**

**பதில்:** *நிலையான குழுவைச் சாராத விசுவாசியாயிருப்பினும் பாரம்பரிய முறையில் செய்யப்படும் திவ்விய பலிபூசையில் பங்கு பெறலாம்.*

**6. மெய்விவாகச் சடங்கினை உரோமைய பாரம்பரிய திவ்விய பலிபூசையில் நிறைவேற்றலாமா?**

**பதில்:** *பாரம்பரிய முறைப்படியான மெய்விவாகம் (திருமணம்) பங்கு குருவின் ஒப்புதலோடு சாத்தியமானதே.* (art.9 par.1).

**7. தன்னிச்சை மடல் வெளியிடப்பட்டதின் மூலம், பரிசுத்த பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பர், பாரம்பரிய பூசையை மேற்றிராசனங்களில் பரவலாக செய்விக்கப்பட விரும்புகிறாரா?**

**பதில்:** *மேற்றிராசனங்களில் பாப்பானவருடைய மடலை விரிவான முறையில் அமல்படுத்துவதைப்பற்றி, மடலில் குறிக்கப்பட்டுள்ள வழிகளை பின்பற்றுவது அவசியமானது.*

**8. வருங்கால குருக்கள் லத்தீன் பூசையை செய்வதற்கு ஏதுவாக குருமட பாடங்களில் லத்தீன் மொழி கற்பிக்கப்படுவதை பாப்பானவர் விரும்புகிறாரா?**

**பதில்:** *குருமடத்தில் லத்தீன் கற்பிக்கப்படுவதுபற்றி திருச்சபைச் சட்டம் CIC c.249-ஐ காண்க.*

*"Institutionis sacerdotalis Ratione provideatur ut alumni non tantum accurate linguam patriam edoceantur, sed etiam* ***linguam latinam bene calleant*** *necnon congruam habeant cognitionem alienarum linguarum, quarum scientia ad eorum formationem aut ad ministerium pastorale exercendum necessaria vel utilis videatur".*

*"மாணவர்கள் தங்களின் தாய்மொழியை நுட்பமாகக் கற்றுக்கொள்வதோடு லத்தீன் மொழியிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; அவர்களின் உருவாக்கத்திற்கோ, மேய்ப்பு பணியை நிறைவேற்றுவதற்கோ அவசியமாக அல்லது பயனுள்ளதாக தோன்றும் மற்ற மொழிகளிலும அவர்கள் தக்க அறிவு பெற்றிருக்க வேண்டும்; இதற்கு ஏதுவாக குருத்துவ பயிற்சி நெறிமுறை ஏடு ஏற்பாடு செய்யவேண்டும்".*

**9. பிரேசில் நாட்டில் பாப்பரசரின் அப்போஸ்தலிக்கத் தூதுவர் (நுன்சியோர்) மாற்றுக் கருத்தை வெளியிட்டாலும், மேற்றிராணியார்கள் பாப்பானவரின் தன்னிச்சை மடலை (Summorum Pontificum) அமல்படுத்துவது சம்பந்தமாக பாப்பரசருடைய எக்ளேசியா தேயி கமிஷனின் அறிவூட்டுதல்களை கடைபிடிக்க வேண்டுமா***?*

*(ஆசிரியர் குறிப்பு: மேற்கூறிய கேள்விக்கு பதில் தரப்படவில்லை)*

.....

**"இதுவுமன்றி, என் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவை அறிகிற உன்னதமான அறிவைப்பற்றி நான் எல்லாவற்றையும் நஷ்டமென்று மதிக்கிறேன். அவருக்காக எல்லாவற்றையும் இழந்துவிட்டு, அவைகளைக் குப்பையென்றும் எண்ணுகிறேன்."** (பிலிப். 3:8.)

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

## I. விசுவாசத்தின்பேரில் வியாக்கியானம் (தொடர்ச்சி)

**கிறிஸ்தவனோவெனில்** மெய்யான வேதத்தை அறிந்து, விசுவாசமுயற்சி செய்த பின், சந்தேகத்தைத் தள்ளும்படி எப்போதும் விசேஷ உதவி பெற்றுக்கொள்ளுகிறதினால், வேத சத்தியங்களின்பேரில் சந்தேகப்படுகிறதற்கு யாதொரு முகாந்தரமுமில்லை.

ஆகையினால் **வத்திக்கான் பொதுச்சங்கம் கொடுத்த கட்டளையாவது**:– ''வேத சத்தியங்கள் விஷயத்தில், விசுவாசிகளுக்கும் மெய்யான வேதத்தை அறியாதவர்களுக்கும் வித்தியாசமில்லையென்றும், திருச்சபையின் போதனையைக் கேட்டு விசுவசித்த பிற்பாடு, விசுவாச முயற்சி செய்வதற்குத் தக்க நியாயங்களுண்டா, வேத சத்தியங்கள் உண்மையானவையா என்ற சந்தேகப்பட்டு, உலக சாஸ்திரத்தின்படி சோதித்து, நிச்சயமாய் அறியுமட்டும், இவைகளை ஏற்றுக்கொள்ளாமலிருக்கலாமென்றும் சாதிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.''

**5. விசுவாச முயற்சி பண்ணுவதற்கு நமது புத்தி செய்யும் ஒத்தாசையென்ன?**

நமது புத்திக்கு எட்டாத சத்தியங்களை முதலாய் நாம் முழு மனதோடு விசுவசிக்கவேண்டுமென்று சர்வேசுரன் கற்பித்திருக்கிறார். ஆனால் தாம்தாமே இந்தச் சத்தியங்களை அறிவித்திருப்பதாக பரிஷ்காரமான அத்தாட்சிகளைக்கொண்டு ஒப்பித்திருக்கிறார். ஆதலால் இந்த அத்தாட்சிகளைப் பரிசோதித்து, சர்வேசுரன் மெய்யாகவே வேத சத்தியங்களை வெளிப்படுத்தியிருக்கிறாரென்று சந்தேகமின்றி உறுதியாய்க் கண்டறிய நமது புத்தி ஒத்தாசை செய்யும்.

**1) மெய்யான வேதத்துக்குள்ள அடையாளங்களென்ன?** ஒரு சத்தியத்தை நாம் கண்டுபிடிக்காவிட்டாலும், சர்வேசுரன் அதை வெளிப்படுத்தினாரென்று புத்தியால் நிச்சயமாய் அறிந்தால் மாத்திரம், விசுவாச முயற்சி செய்யக்கூடும். ஆகையினால் சர்வேசுரன் மனிதருக்குத் தமது சித்தத்தை அறிவிக்கும்போது, தமது அதிகாரத்தின் முத்திரை போன்ற மறுக்கப்படாத சில அடையாளங்களைக் காண்பிக்கிறார். இந்த மறுக்கப்படாத அடையாளங்கள் மெய்யான புதுமைகளும் மெய்யான தீர்க்கதரிசனங்களுமே. சத்திய வேதத்தில் மாத்திரம் இந்த அடையாளங்களுண்டு. இந்தப் புதுமைகளும் தீர்க்கதரிசனங்களும் மெய்யானவையா என்று விசாரித்துத் தீர்மானிப்பது புத்தியைச் சார்ந்தது. மெய்யான வேதத்தை அறியாதவர்கள் தேவ அடையாளங்களைக் கவனமாய் ஆராய்ந்து விசாரித்தால்தான், சர்வேசுரன் வெளிப்படுத்தின சத்தியங்களை அறிந்துகொள்வார்கள்.

**2) இந்த அடையாளங்களினிமித்தம் வேத சத்தியங்களை விசுவசிக்கிறோமா?** எதுவுமில்லை. அவ்விதம் விசுவசிக்கும்போது, நாம் நமது புத்தியின் சுபாவ வெளிச்சத்தைக்கொண்டு விசுவசிப்பதினால், அது சுபாவ விசுவாசமாகுமேயொழிய, தேவ விசுவாசம் என்னும் புண்ணியமாகாது. சர்வேசுரன் வேத சத்தியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதற்கு இந்த அடையாளங்கள் உதவியாயிருக்கின்றன என்பது மெய்தான். ஆனால் இப்படி சர்வேசுரன் மெய்யாகவே பேசியிருக்கிறாரென்று அறிந்துகொண்ட பிற்பாடு, இந்த அடையாளங்களைப் பற்றிச் சிறிதும் கவனியாமல், சர்வேசுரன் தாமே வெளிப்படுத்தினதினிமித்தம் சகல வேத சத்தியங்களையும், தேவ வரப்பிரசாதத்தின் உதவியைக்கொண்டு விசுவசிக்கிறோம். இதுவே சுபாவத்துக்கு மேற்பட்ட விசுவாசமாகும்.

**6. தேவ விசுவாச முயற்சி பண்ணுவதற்கு நமது மனது செய்யும் ஒத்தாசையென்ன?**

மனது புத்தியை ஏவித் தூண்டவேண்டியது. அதனால்தான் வேத சத்தியங்களைச் சந்தேகமின்றி ஏற்றுக்கொண்டு விசுவசிப்பது மனதின் சுயாதீன முயற்சியென்று திருச்சபை போதிக்கின்றது.

**1) மனதுக்கும் புத்திக்கும் ஓர் பெரிய வித்தியாசமுண்டு:–** மனதுக்கு சுயாதீனமிருக்கிறது. ஆதலால் எந்தக் காரியத்தையும் தன் இஷ்டம்போல் ஏற்றுக்கொள்ளவும், புறக்கணித்துவிடவும் அதற்கு வல்லமை உண்டு. புத்தியோவெனில், யாதொரு காரியம் உண்மையாயிருக்கிறதென்று பரிஷ்காரமாய்ப் பார்த்தால், அதை அகத்தியம் ஒத்துக்கொள்ளும். ஆனால் பரிஷ்காரமாய்த் துலங்காதபோது, மனதின் ஏவுதலுக்குக் கீழ்ப்படியும். விசுவாச முயற்சி செய்யும்போது, நமது புத்தியானது சர்வேசுரன் ஓர் விஷயத்தை அறிவித்திருக்கிறாரென்று கவனிக்கிறதேயல்லாமல், அது எப்படி உண்மையாயிருக்கிறதென்றும், அதன் சுபாவத்தன்மை என்னவென்றும் ஆராய்ந்து பார்க்கிறதில்லை. ஆகையினால், மனது புத்தியின் ஒத்தாசைக்கு வந்து, பரிஷ்காரமாயிருக்கும் உலக சத்தியங்களை அது ஏற்றுக்கொள்ளுகிறதைவிட, சகல வேத சத்தியங்களையும் அதிக நிச்சயத்தோடு அங்கீகரித்துக்கொள்ளும்படி அதைப் பலமாய்த் தூண்டி மடக்கித் திருப்புகிறது அவசியம். இதுவே நமது மனதின் உன்னத அலுவலாகும்.

**2) இப்படி நடப்பது மகா நியாயமாமே –** ஏனெனில் வேத சத்தியங்களை அறிவித்த சர்வேசுரன் அளவில்லாத சத்திய சுரூபியாயிருக்கிறார் என்று நமது புத்தி தெளிவாய்க் கண்டுபிடித்த பிறகு, சுபாவ வெளிச்சத்தினால் அறிந்த சத்தியங்களைப்பார்க்க வேத சத்தியங்கள் அதிக நிச்சயமாயிருக்கின்றனவென்று புத்தி மனதுக்குக் காண்பிக்கின்றது. அதனால் வேத சத்தியங்களை விசுவசிக்கிறது மிகவும் நல்லதென்றும், சர்வேசுரனுக்கு மிகவும் பிரியமானதென்றும் மனது முழுவதும் ஏற்றுக்கொள்ளுகிறது. அப்போது புத்தியானது, ஏதேனும் ஒத்துக்கொள்ளுமுன் சோதித்துப் பார்க்கவேண்டுமென்கிற தன் இயல்பான சார்புக்கு இடங்கொடாமல், சர்வேசுரன் வெளிப்படுத்தின சத்தியங்களைப் பூரணமாய் ஏற்றுக்கொள்ளவும், வருகிற சந்தேகங்களைத் தள்ளி உறுதியாய் விசுவசிக்கவும், மனதால் தூண்டப்படுகிறது. மனதின் இந்தக் கற்பனைக்குப் புத்தி கீழ்ப்படிய, மனச் சுதந்திரமாய் நாம் விசுவாச முயற்சி செய்கிறது மகா பேறுபலனுள்ள புண்ணியமாகும்.

விசுவாச முயற்சி செய்யவும் செய்யாதிருக்கவும் நம் மனதுக்கு சக்தியிருப்பதினால்தான் விசுவாச முயற்சி பண்ணவேண்டுமென்று சர்வேசுரன் கட்டளை கொடுத்திருக்கிறார். அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களுக்கு நித்திய சம்பாவனையும், அதை மீறி நடப்பவர்களுக்கு ஊழியுள்ள நரக ஆக்கினையும் சர்வேசுரன் விதிப்பாரென்பது நிச்சயமும் நியாயமுமான விஷயம்.

(தொடரும்)

# திருயாத்திரை நினைவுகள்!



முத். குரியாகோஸ் சாவராவின் திருத்தலம்.



முத். குரியாகோஸ் சாவராவின் கல்லறையில்
திருயாத்ரிகர்கள் ஜெபிக்கும் காட்சி.



புதுப்பொலிவுடன்
விளங்கும்
அர்ச். அல்போன்ஸாவின்
திருத்தலம்.



முத். குரியாகோஸ் எலியாஸ் சாவரா.



வல்லார்பாடம்
பசிலிக்காவிலுள்ள
அர்ச். அடைக்கல மாதா
ஆலய பீடத்தின்
தோற்றம்.



அர்ச். அல்போன்ஸா
பிறந்த இல்லம்

# ஞான குழந்தைத்துவத்தின் சிறிய வழி!

(அர்ச். குழந்தை சேசு தெரேசம்மாள் காட்டிய ஞான குழந்தைத்துவம் (Spiritual Childhood) என்ற சிறிய வழியைப் பற்றிய விளக்கம். அர்ச். தெரேசம்மாளையும், அவளது சொந்த சகோதரிகளையும் நன்கு அறிந்தவரான சங். மார்டின் சுவாமி என்பவர் எழுதிய " The Little way of Spiritual Childhood" என்ற நூலின் தமிழாக்கம். ஆர்.)

**இரண்டாம் அத்தியாயம்** (தொடர்ச்சி)

ஞான ஜீவியத்திற்கும் சுபாவ-இயல்பான ஜீவியத்திற்கும் இடையே முக்கியமான வித்தியாசம் இருப்பதை நாம் கவனிப்போமாக: சுபாவ-இயல்பான ஜீவியத்தில் ஒருவன் எப்பொழுதும் சிறுபிள்ளையாக இருப்பது என்பது முடியாது. தவிர்க்க முடியாத வளர்ச்சி அதில் இருக்கும்; விரைவில் குழந்தை பருவத்தைக் கடந்து வாலிபத்தையும் பின்னர் முதுமையையும் அடையவேண்டும். மாறாக, ஞான ஜீவியத்தில் நாம் வளர வளர முன்னோக்கிச் செல்லச் செல்ல சிறு பிள்ளையாய் மாறுவது அவசியம். இதில் முன்னேற்றம் -வளர்ச்சி என்பது தாழ்ச்சியில் வளர்வதில்தான் அடங்கியிருக்கிறது. அதாவது, நமது ஒன்றுமில்லாத் தன்மையை மிகத் தெளிவாய் அறிந்து அதை விரும்புவதில்தான் அடங்கியிருக்கிறது. எவ்வளவுக்கு அதிகமாய் ஒரு ஆத்துமம் தன்னுடைய பலவீனத்தையும், இரங்கத்தக்க தன்மையையும் அறிய விரும்புகிறதோ அந்த அளவிற்கு பற்றியெரிந்து வசீகரிக்கும் சிநேகத்தின் செயல்பாடுகளுக்கு பாத்திரமானதாக இருக்கும்.



எந்த அளவிற்கு தனது பலவீனத்தையும் ஒன்றுமில்லாமையையும் ஆத்துமம் விரும்புகிறதோ அந்த அளவிற்கு அதற்கு ஞான வெளிச்சம் கொடுக்கிறார். இதனையே அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாள் "எனது சிறிய ஆத்துமத்தில் சேசுநாதருக்குப் பிரியமாய் இருப்பது, நான் எனது சிறுமையையும், தரித்திரத்தையும் நேசிப்பதும், அவரது இரக்கத்தில் நான் கொண்டிருக்கும் அளவில்லாத நம்பிக்கையுமேயாகும்" என்று கூறுகிறாள்.

சகல வல்லமையுள்ள சேசுவின் செயல்பாடுகளில் அதிக நம்பிக்கை வைப்பது சிறிய ஆன்மாவிற்கு மிகவும் அவசியமாயிருக்கிறது. இதைப்பற்றியே அர்ச். தெரசம்மாள் "சேசுவே என்னில் எல்லாவற்றையும் செய்விக்கிறார்; நானோ ஒன்றுமில்லாத பலவீனள்" என்று கூறுகிறாள். சேசுநாதர் ஆத்துமத்தில் செய்யும் உள்ளார்ந்த செயல்கள் ஆத்துமத்தின் தனிப்பட்ட சொந்த முயற்சியிலிருந்து விலக்கு அளிப்பதில்லை என்பதை நாம் எண்பிக்கவிருக்கிறோம்: எல்லாம் வல்ல சர்வேசுரனுக்கு சிறு பிள்ளையாய் மாறி தனது பரலோக பிதாவுக்கு பிரியமுள்ள விதமாய் நடப்பதற்கு எவ்வித வாய்ப்பையும் தாராள மனதுடன் தேடவேண்டும்.

குழந்தைத்துவத்தின் அடிப்படைத் தேவையான சிறிய தன்மையையும், பலவீனத்தையும் அங்கீகரித்து தேடி நேசிப்பதைக் குறித்து முதலில் நாம் பார்ப்போம்: இந்த நிலை (குழந்தைத்துவ நிலை) எந்த வயதிலும், எந்த அந்தஸ்திலும் எப்பொழுதும் அனுசரிக்கக் கூடுமான ஒன்றே. அர்ச். குழந்தை சேசு தெரசம்மாள் சொல்லுவது போல, மிக முக்கியமான தொழிலைச் செய்தாலும், மிக முதிர்ந்த வயதை எட்டியிருந்தாலும், சிறியவளாய் இருப்பது சாத்தியமே! மேலும் அவள் சொல்லியது போல "நான் 80 வயது வரை வாழ்ந்தாலும், எல்லா தொழிலைச் செய்தாலும், நாம் இப்பொழுது எப்படி சிறியவளாய் இருக்கிறேனோ அப்படியே என் மரண படுக்கையிலும் இருப்பேன்".

மேற்சொல்லப்பட்ட வார்த்தைகள் பயனற்றவைகள் அல்ல. எந்நிலையிலும், எச்சூழ்நிலையிலும் கடைப்பிடிக்க ஏற்புடையதே. இவ்வழியில் நுழைவதற்கு எந்த நேரமும் உகந்ததே! (தொடரும்)

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)

## (18) தருமத்தினுடைய கண்ணாடியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அர்ச். கன்னிமரியம்மாள், மற்ற அர்ச்சியசிஷ்டவர்களைப் போல் அல்லாமல் மிகவும் உத்தமமான விதத்தில் சகல புண்ணியங்களிலும் நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துவை கண்டுபாவித்தார்கள். நமதாண்டவரின் புண்ணியங்கள் அனைத்தும் மாதாவிடம் பிரதிபலித்தன. எனவேதான் தாய் திருச்சபை தேவதாயை "தருமத்தினுடைய கண்ணாடியே" என்று போற்றுகிறது.

"**தருமம்**" என்ற சொல் இலத்தீன் மொழியிலுள்ள யூஸ்தீஸியா (Justitia ) என்ற பதத்தின் தமிழ்ச் சொல்லாகும். Justitia என்ற பதத்தை "**தருமம்**" என்றில்லாமல் "நீதி" என்று மொழிபெயர்ப்பதே சரியாகும்.



### நீதி எதில் அடங்கியுள்ளது?

ஒவ்வொருவருக்கும் உரிய உரிமைகளை அவரவர்களுக்குச் செலுத்துவதில்தான் நீதி அடங்கியுள்ளது. நம்மை சிருஷ்டித்து காத்துவரும் நமது சர்வேசுரன் மட்டிலும், நம்மைச் சுற்றிலும் இருக்கும் அயலார் மட்டிலும் மற்றும் நமது மட்டிலும் நாம் அனுசரிக்கவேண்டிய கடமைகள் பல உண்டு. சர்வேசுரனுக்கு ஆராதனை செலுத்தி, அவருடைய கற்பனைகளை சரிவர படித்து, அனுசரித்து, செய்த பாவங்களுக்காக தக்கப் பரிகாரம் செய்வதில் சர்வேசுரன் மட்டில் நாம் அனுசரிக்கவேண்டிய கடமைகள் அடங்கியுள்ளன.

சுருக்கமாகக் கூறினால், பத்துக் கற்பனைகளின் அடக்கமாகிய: 1. எல்லாவற்றிற்கும் மேலாக சர்வேசுரனை சிநேகிக்கிறது. 2. தன்னைத்தான் சிநேகிப்பது போல மற்றெல்லோரையும் சிநேகிக்கிறது என்ற இரு கற்பனைகளின் அனுசரணையில்தான் நீதி என்னும் புண்ணியம் அடங்கியுள்ளது. எனவே ஒரு மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு புண்ணியத்தில் ஓங்கி வளர்ந்துள்ளார்களோ அவ்வளவுக்கதிகமாய் **நீதிமான்** என்று அழைக்கப்படுகிறார்கள். வேதாகமம் அர்ச். சூசையப்பரை "நீதிமான்" என்று அழைக்கிறது.

மனிதாவதாரமெடுத்த நமதாண்டவரிடம் சகல புண்ணியங்களும் அளவற்ற விதமாய் பிரகாசித்தன, அவரே **நீதி**. இதனால்தான் சேசுவின் திருநாமத்தின் பிரார்த்தனையில் "நீதி ஆதித்தனாகிய (சூரியன்) சேசுவே" என்று திருச்சபை மன்றாடுகிறது.

### கண்ணாடியின் தன்மை!

தனக்கு முன் நிறுத்தப்படும் பொருளின் பிரதியைத் தாங்குவது கண்ணாடியின் இயல்பாகும். மேலும் ஒளிக்கதிர்கள் தன் மேல் பட்டால் அதைப் பிரதிபலிக்கும் குணம் கண்ணாடிக்கு உண்டு. நமது தேவதாய், திரிதெந்தீன் பொதுச்சங்கம் போதிப்பது போல, சர்வேசுரனின் விசேஷ வரத்தால் அற்பப் பாவம் யாவற்றிலுமிருந்து காப்பாற்றப்பட்டார்கள். (cfr. cone. Trid. Sess VI, can. 23). எனவே அவர்களிடம் நீதி என்னும் புண்ணியம் ஆச்சரியப்படத்தக்க வகையில் விளங்கியது. அதோடு சூரியனிடமிருந்து புறப்படும் ஒளிக்கதிர்கள் எப்படி கண்ணாடியின்மேல் பட்டு பிரதிபலிக்குமோ அப்படியே நீதியின் சூரியனான சேசுவிடமிருந்து புறப்படும் புண்ணியக் கதிர்கள், ஒரு சிருஷ்டியால் எவ்வளவு மேலாக பிரதிபலிக்கப்பட முடியுமோ அவ்வளவுக்கு மேலாக மரியன்னையால் பிரதிபலிக்கப்படுகிறது. இதனால்தான் திருச்சபை "நீதியின் (தருமத்தின்) கண்ணாடியே" என்று மாதாவை அழைக்கிறது. இது வெறும் புகழ்ச்சிக்காக மட்டுமல்லாது, ஆழ்ந்த பொருளும் யதார்த்தமும் இதில் அடங்கியுள்ளது. நமதன்னையின் இப்பெருமைகளைப்பற்றி நாமும் மகிழ்வோம்.

சேசுவிடம் விளங்கின புண்ணியங்களை நாமும் கண்டுபாவிக்க நமக்கு வேண்டிய தேவ உதவியை நமக்குப் பெற்றுத் தருமாறு தேவ அன்னையைப் பக்தியுடன் மன்றாடுவோமாக!

**"தருமத்தினுடைய கண்ணாடியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்"**

சித்திரத் தொடர்!

# பாலர் பக்கம்



# அர்ச். கிளாரம்மாள் சரிதை




**24.** குளிர்காலம் வந்தது. எங்கும் பனிபொழிவு. மரங்கள், செடிகள் எல்லாம் வெண்பனியால் மூடப் பட்டிருந்தது. அந்த குளிரை சகோதரிகளால் தாங்க முடியவில்லை. தங்களை குளிரிலிருந்து பாதுகாக்கத் தேவையான நெருப்பை பற்றவைக்க மரச்சுள்ளிகள் கூட இல்லை.




**25.** அன்று மதியம் சகோதரிகள் வெகு தூரத்தில் ஓர் உருவம் எரிக்க விறகுச் சுள்ளிகளைத் தூக்க முடியாமல் சுமந்துகொண்டு வருவதைக் கண்டார்கள். அருகில் நெருங்க, ''அது கிளாரா அல்லவா?'' என்று மகிழ்ச்சியோடு கூறினர். ஆம்! கிளாரா, தன் சகோதரிகளை குளிரிலிருந்து காக்க கடுமையான குளிரையும் பொருட்படுத்தாமல் காட்டிலிருந்து விறகுகளை சேகரித்து வந்தாள். ''இந்த மரச் சுள்ளிகளைக் கொண்டு நீங்கள் குளிர்காய்ந்துகொள்ளுங்கள். நெருப்பு என்பதே சர்வேசுரனுடைய பரிசு அல்லவா!'' என்று கூறினாள்.

**26.** அச்சமயத்தில் புதிதாக ஒரு இளம் பெண் அவர்களோடு சேர்ந்துகொண்டாள். அவள் படுக்கப் போதுமான வைக்கோல் இல்லை. எப்போதும் தனது சகோதரிகளின் நலனையே விரும்பும் கிளாரா தனது அறையிலுள்ள வைக்கோலை அவளுக்குக் கொடுத்தாள். தனக்கு சிறு பலகையை மட்டும் தலையணையாக வைத்துக் கொண்டாள். அப்போதும் மகிழ்ச்சியடைந்த கிளாரா ''ஆண்டவரே சிறிய மரப் பலகையில் படுத்தாலும் எனக்கு நல்ல தூக்கத்தைத் தருகிறீர். அதுவே எனக்குப் போதும்'' என்று ஜெபித்தாள்.






**27.** ஒருநாள் மாலை, மடத்துக் கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்த கிளாரா ஆச்சரிய மடைந்தாள்! அங்கே அவளது தாய் நின்று கொண்டிருந்தாள். ''ஆ! அம்மா! நீங்களா? வாருங்கள். எப்படியாவது ஒருநாள் எங்களைக் காண வருவீர்கள் என்று எதிர்பார்த்திருந் தேன்!'' என்று உள்ளே அழைத்துச் சென்றாள்.




**28.** தனது தாயோடு பேசி மகிழ்ந்தாள் கிளாரா. அவள் வீட்டைவிட்டு வந்ததிலிருந்து தனிமையை உணர்ந்து வேதனை அடைந்த அவளது தாய், ''வீட்டிற்கு திரும்பி வா மகளே!'' என்று அழைத்தாள். அதற்கு கிளாரா, ''அம்மா எப்போதெல்லாம் தனிமையை உணர்கிறீர்களோ, அப்போது எங்களை நினைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் எப்போதும் உணர்வுபூர்வமாக உங்களோடுதான் இருக்கிறோம். உங்களுக்காகச் செபிக்கிறோம்'' என்று கூறினாள். தாய் ஏமாற்றத்தோடு வீடு திரும்பினாள்.




**29.** மடத்தில் ஒவ்வொரு சகோதரிக்கும் வேலைகள் ஒதுக்கப்பட்டன. சிலர் தோட் டத்தில், சிலர் சமையல் அறையில், சிலர் ஆலய பராமரிப்பில், சிலர் நகருக்குச் சென்று உணவை யாசகம் (பிச்சை எடுப்பதில்) செய்வதில் ஈடுபட்டனர். இப்படி யாசகம் செய்துவிட்டு மடத்துக்குத் திரும்பும் சகோதரி களுக்கு முன்பாக கிளாரா முழந்தாளிட்டு அவர்களது பாதங்களைக் கழுவி துடைத்து முத்தமிடுவாள்.

**30.** ஒருநாள் அர்ச். பிரான்சிஸ் கிளாராவை தங்களுடைய மடத்துக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். அங்கு சென்ற கிளாராவை சகோதரர்கள் அனைவரும் வரவேற்றனர். அவளோடு சேர்ந்து தங்களது எளிய உணவை உண்டனர். சர்வேசுரனுக்கு தோத்திரம் செய்து அவரது பராமரிப்பிற்கு நன்றி கூறினர்.


(தொடரும்)




**''மனத்தரித்திரர் பாக்கியவான்கள்: ஏனெனில் மோட்ச இராட்சியம் அவர்களுடையது.''** (மத். 5:3.)

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை

## அறிந்து கொள்வோம்!



[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]

### முதல் பாகம்

#### இரண்டாம் பிரிவு (உபதேசப் பாகம்)

### 8. ஆசீர் கேட்டல்

(அப்போஸ்தலர்களின் போதனையை தியானித்து – சேசுவின் போதனைக்கு தயாரித்தல்)

#### இசையாஸ் தீர்க்கதரிசியின் மனப்பான்மை

"Jube, Domine,benedicere ...ஆண்டவரே, என்னை ஆசீர்வதித்தருள்வீராக..." என்ற குருவானவரின் இந்த விண்ணப்பம் - மன்றாட்டு இசையாஸ் தீர்க்கதரிசியின் வாழ்வில் நிகழ்ந்த மறைபொருளான நிகழ்ச்சியினை (இசை. 6:5-10) அடிப்படையாகக் கொண்டிருப்பதை உணரலாம். இசையாஸ் தாம் தீர்க்கதரிசியாக சர்வேசுரனால் அழைக்கப் பட்டதையும், அதற்கெனவே அர்ப்பணிக்கப்பட்டதையும், தாம் செய்யவேண்டிய அலுவலையும் வெளிப்படுத்துகிறார். ஓர் அற்புதமான காட்சியில் சேனைகளின் ஆண்டவரின் மகிமையைக் காண்கிறார். சர்வேசுரனை புகழ்ந்து துதிக்கும் சம்மனசுக்களின் கீதத்தையும் கேட்கிறார். ஆகையால், பரிசுத்த வியப்புடன் கூடிய அச்ச உணர்வால் நிரப்பப் படுகிறார். தமது பாவங்களையும் பரிதாபமான நிலையை யும் உணர்ந்து, தமது தகுதியின்மையை ஏற்றுக்கொண்டு சங்கீர்த்தனம் செய்கிறார். அப்போது ஒரு பக்திசுவாலகரான சம்மனசு, மோட்ச மகிமையின் பீடத்திலுள்ள தூபகலசத்தி லுள்ள எரிநெருப்பை குறடால் எடுத்து, தீர்க்கதரிசியின் உதடுகளைத் தொட்டு "இதோ இந்த நெருப்பு உன் அதரங்களைத் (உதடுகளை) தொட்டது; ஆதலில் உன் அசிருதம் (பாவக்கறை) எடுபட்டது. நீயும் பாவத்தினின்று சுத்திகரிக்கப்பட்டாய்" என்றார். (இசை. 6:7). பிறகு இசை யாஸ் "இதோ, அடியான் என்னை அனுப்புமே" என்று கூறினார்.



தீர்க்கதரிசி கண்ட எரிநெருப்பு வரப்பிரசாதத்திற்கும், அதன் வல்லமைக்கும் அடையாளமாய் இருக்கிறது. வரப்பிரசாதம் ஞான நெருப்பைப் போன்று ஆன்மாவில் இருக்கும் கறைகளை அழித்து, சுத்தம் செய்து ஆன்மாவை மிகவும் பிரகாசமானதாகவும், சுத்த தங்கத்தையும் வெள்ளியையும் போல் துலங்கி பிரகாசிக்கச் செய்யும் வலிமை கொண்டது. இஸ்பிரீத்துசாந்துவானவரின் வரப்பிரசாதத்தின் நெருப்பு இதயத்தை தூய்மைப்படுத்துவது மட்டுமல்லாமல் மனதை ஞானத்தால் நிரப்பி ஒளிர்விக்கின்றது. அதோடுகூட, ஆன்மாவில் பரலோக நேசத்தையும் மூட்டுகிறது.

"Jube, Domine,benedicere ...ஓ ஆண்டவரே, என்னை ஆசீர்வதித்தருள்வீராக..." என்ற இந்த மன்றாட்டு, திருவழிபாட்டிலேயே மிகுந்த தாழ்ச்சியும் பக்தியும் நிறைந்த மன்றாட்டாக விளங்குகிறது. அதே சமயம் தகுதியுடைய மன்றாட்டாகவும் உள்ளது. இது குருவின் தகுதியினை உணர்த்துவதாகவும் இருக்கிறது. குரு என்ற ஆசீர்வாதத்தை இரண்டு

வகைகளில் கேட்பதாக உள்ளது. அது என்னவென்றால், ஆண்டவர் குருவின் தூய்மையாக்கப்பட்ட இருதயத்திலும், பரிசுத்தமாக்கப்பட்ட உதடுகளிலும் இருக்கிறார் என்பதை உணர்த்துகிறது. அதாவது, ஆண்டவர் குருவின் இதயத்தில் இருந்தால் மீட்பின் செய்திகளை அறிவிக்க அவர் தகுதியுடையவராவார். ஆண்டவர் அவரது உதடுகளில் இருந்தால் குரு சுவிசேஷத்தை அறிவிக்கும் தகுதியைப் பெறுவார். எப்படியெனில், சுவிசேஷத்தை தகுந்த முறையிலும், வகையிலும் தெளிவாகவும், துல்லியமாகவும், வல்லமையோடும் சத்துவத்தோடும் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் அறிவிக்கத் தகுதியுடையவராவார். இந்த வகையில் குருவானவர் தயாரிக்கப்படுகிறார். குரு சுவிசேஷத் தண்ணீரைப் பெற்று, விசுவாசிகளின் இருதயங்களுக்குள் கொடுக்கும் தூய வாய்க்காலாக இருக்கிறார்.

### சுவிசேஷ அறிவிப்பு

இந்த வகையான தயாரிப்புகளுக்குப் பிறகு, குரு பீடத்தின் மத்தியில் இருந்து சுவிசேஷப் பக்கத்திற்கு மெல்ல நகர்ந்து செல்கிறார்.

### சுவிசேஷம் மாற்றுதல்

(பூசைப் புத்தகத்தை பீடத்தின் மறுபக்கம் கொண்டு செல்லுதல்)



நமதாண்டவர் தமது போதக அலுவலின் நேரம் வந்ததும் யூதேயா நாட்டை விட்டு வெளியேறி கலிலேயா நாட்டிற்குச் சென்றார். புற இனத்தவர்கள் அதிகமாக வசித்து வந்த கப்பர்நாவும் ஊரைத் தேர்ந்துகொண்டார். சுவிசேஷப் போதனைக்குத் தன்னைத் தயாரிப்பதற்காக வனாந்தரத்தில் 40 நாட்கள் தவம் புரிந்தார். இச்சம்பவங்களை பலிபூசையின் சுவிசேஷம் மாற்றுகிற சடங்கின் மூலம் திருச்சபை மிக அருமையாக நமக்கு உணர்த்துகிறது!

குருவானவர் பலிபீடத்தின் "நிருபப் பக்கத்தை" விட்டு அகலுவது, நன்றியற்ற யூதேயா தேசத்தை விட்டு நமதாண்டவர் வெளியேறியதைக் குறிக்கிறது. பீடத்தின் நடுவில் குருவானவர் சற்று நேரம் தலை குனிந்து ஜெபிப்பது, நமதாண்டவர் ஜெபத்தாலும், உபவாசத்தாலும் தன்னையே சுவிசேஷப் போதனைக்குத் தயாரித்ததைக் குறிக்கிறது. ஆடம்பரப் பாடற் பூசையில் சுவிசேஷப் புத்தகம் பீடத்தின் மறுபக்கத்திற்கு ஆடம்பர பவனியுடன் எடுத்துச் செல்லப்படும். இது தேவ வார்த்தையை உதாசீனம் செய்து, அதனைப் போதித்த அப்போஸ்தலர்களைப் புறக்கணித்து விட்ட யூத ஜனங்களிட மிருந்து சுவிசேஷப் போதனை எடுபட்டு புற இனத்தாருக்குக் கொண்டு செல்லப்பட்டதைக் குறிக்கிறது.

சிதறிப்போன இஸ்ராயேல் மக்கள் தங்கள் முன்னோர்கள் இழந்துபோன விசுவாசத்தை மீண்டும் பெற்று திருச்சபையாகிய கிறீஸ்துவின் மந்தையில் வந்து சேருவார்கள் - என்ற தீர்க்கதரிசனத்தை உணர்த்தும் விதத்தில் அதே பூசைப் புத்தகம் பலிபூசையின் முடிவில் மீண்டும் நிருபப் பக்கத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

### சுவிசேஷ வாக்கியம் (Evangelium)

நமதாண்டவரின் ஜீவிய சரித்திரமாகிய சுவிசேஷத்தில் ஒரு பகுதியை வாசிக்க குருவானவர் சுவிசேஷப் பக்கத் திற்குச் செல்கிறார். சங்கையுடன் அதைக் கேட்பதற்கு விசுவாசிகள் எழுந்து நிற்கிறார்கள். ஒவ்வொரு பூசையிலும் வாசிக்கப்படும் சுவிசேஷ வாக்கியமானது அந்தந்த திரு நாளுக்குப் பொருத்தமான சத்தியங்களை உணர்த்தக் கூடியதாக தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது.

**வடதிசை நோக்கி...!** திருவழிபாட்டு ஒழுங்கு முறைப்படி சுவிசேஷம் வாசிக்கிற குருவானவர் வடக்கு திசை நோக்கி நிற்கவேண்டும். ஜெருசலேமின் வடபுறத்திலே லூசிபேர் தமது ஆசனத்தை ஸ்தாபித்துள்ளதாக இசையாஸ் தீர்க்கதரிசி கூறுவதாலும் (இசை. 14:13), "வடபக்கத்தினின்றே தீங்கு இந்நாட்டின் சகல பிரஜைகள் மீதும் பாயும்" (எரே. 1:14) என்று எரேமியாஸ் தீர்க்கதரிசி எழுதியுள்ளார். பூமியின் மீது சாத்தான் ஏவிவிடும் விஷத் தாக்குதல்களுக்கு எதிர் சக்தியாயிருக்கிற தேவ வாக்கியத்தை வடக்கு நோக்கி நின்று போதிப்பது பொருத்தமானது. பூசைப் புத்தகமானது பீடத்திற்கு இணையாக இல்லாமல் பீடத்தின் ஓரத்தை நோக்கியவாறு சற்று திரும்பியவாறு வைக்கப்படவேண்டும். அப்போதுதான் சுவிசேஷத்தை வாசிக்கும் குருவானவர் மக்களை நோக்கி சற்று திரும்பியவாறு, வடக்கு திசையை பார்த்து நிற்பார். இந்த நிலையில் குருவானவர் சுவிசேஷத்தை சாதாரணமாக வாசிக்கவோ அல்லது ஆடம்பரமாக பாடவோ செய்கிறார்.

(தொடரும்)

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

(இக்கட்டுரைத் தொடர் Rev. George A. Kelly எழுதிய "The Catholic Family Hand Book" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

## 1. மகிழ்ச்சியான குடும்பம் (தொடர்ச்சி)

### பெற்றோர்களின் அலுவல்!

"வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே" என்று தீர்வை நாளில் நம் ஆண்டவர் உங்களை அழைக்கும்போது ஆண்டவரின் அந்த அழைத்தலே, உத்தம குடும்ப ஜீவியத்திற்காக நீங்கள் எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளுக்கான பரலோக சன்மானமாகும்.

தாங்கள் ஒருவர் ஒருவரையும்; தங்களுடைய பிள்ளைகளையும் மெய்யாகவே நேசிப்பவர்களாக விளங்கும் தாய் தந்தையரையும், தங்களுடைய பெற்றோரை மதித்து சிநேகிப்பவர்களாகவும், அவர்களுக்கு கீழ்ப்படிபவர்களாகவும் விளங்கும் பிள்ளைகளை கொண்டிருக்கும், உண்மையான மகிழ்ச்சியுடைய குடும்பங்களை கவனமுடன் நீங்கள் ஆய்ந்தறிவீர்களானால், அக்குடும்பத்தினர், பொதுவில், அநேக சிறப்பான நல்ல குணங்களைக் கொண்டிருப்பதைக் காண்பீர்கள். இக்குடும்பங்களுடைய குணாதிசயங்கள் தனித்தன்மை வாய்ந்தனவையாகவும் இனம் கண்டுக்கொள்ளக்கூடியனவாகவும் விளங்கும். அதே சமயம் அவை கூச்சல் குழப்பம், சண்டை சச்சரவு, கசப்பு நிறைந்த குடும்பங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவையாக விளங்கும். திருச்சபைக்கு கிடைத்திருப்பது போல வேறு எந்த அமைப்பிற்கும் மகிழ்ச்சிமிக்க குடும்பங்களின் குணநலன்களை கவனிக்கும் வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. பல நூற்றாண்டுகளாக, குடும்ப ஜீவியமே, பெற்றோர்களையும் பிள்ளைகளையும், பரிசுத்தமும் மகிழ்ச்சியும் மிகுந்த ஜீவியத்திற்கு இட்டுச் செல்வதற்கு உதவும் அரிய சாதனமாக விளங்குவதை திருச்சபை கண்டறிந்துள்ளது. மேலும், குடும்பத்தில் பரிசுத்ததனமும் மகிழ்ச்சியும் ஏற்படுவதற்கு பக்கபலமாகத் திகழும் மிகச்சிறந்த காரணங்கள் எவையென்றும் மிக கவனத்துடன் திருச்சபை ஆய்ந்தறிந்துள்ளது. இவ்வாறு தொன்றுதொட்டு நெடுங்காலமாக திருச்சபை கண்டறிந்த இவ்வுண்மைகளை சமீப காலத்தில், சமூக அறிவியலாளர்கள் தங்களுடைய ஆராய்ச்சியில் அறியவந்துள்ளனர். இந்த ஆராய்ச்சியாளர்கள், ஆயிரக்கணக்கான மகிழ்ச்சியான குடும்பங்களையும், மகிழ்ச்சியற்ற குடும்பங்களையும் சந்தித்து பல கேள்விகளைக் கேட்டு, அவர்களுடைய பதில்களை குறிப்பெடுத்துள்ளனர். இக்குறிப்புகளின் மூலம் மகிழ்ச்சிமிக்க குடும்பங்களின் குணாதிசயங்களை, அவர்கள் பட்டியலிட்டுள்ளனர். அத்தகைய குணாதிசயங்கள், மகிழ்ச்சியற்ற குடும்பங்களிடம் காணப்படவில்லை என்றும் வெளிப்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு மகிழ்ச்சிமிக்க குடும்பமும் ஐந்து முக்கிய குணாதிசயங்களைக் கொண்டு விளங்குகின்றது என்பதை, திருச்சபை நூற்றாண்டுகளாக ஆய்ந்தறிந்தவைகள், சமூகவியலாரின் நவீன அறிவியல் முறைகளின்படி கண்டறிந்தவைகளுடன் ஒத்துப்போகின்றன.



மகிழ்ச்சிமிக்க குடும்பத்தின் முதல் குணாதிசயம் என்னவெனில், அக்குடும்பம் யாதொரு கேள்வியுமின்றி சர்வேசுரன் மேல் முழுநம்பிக்கையை கொண்டிருப்பதாகும். தகப்பன், தாய் மற்றும் பிள்ளைகள் என்று அந்தக் குடும்பத்திலுள்ள அனைவரும் யாதொரு விருப்பு வெறுப்பின்றி, எல்லாம் வல்ல சர்வேசுரனை தங்களுடைய சிருஷ்டிகர் என்று ஏற்றுக்கொள்வர். அவர்கள், தங்களுடைய அன்றாட ஜீவியத்தின் மூலம், சர்வேசுரனை சிநேகிப்பார்கள்; அவருடைய கற்பனைகளை சங்கை செய்து அவற்றை அனுசரிப்பார்கள். குடும்பத்திலுள்ள அனைவரும் சேர்ந்து ஜெபிப்பார்கள். அவர்கள் குடும்பமாகச் சேர்ந்து திவ்விய பலிபூசைக்கு செல்வார்கள். அனைவரும் திவ்விய நன்மை உட்கொள்வர். மற்ற அநேக பக்தி முயற்சிகளையும் அவர்கள் சேர்ந்தே அனுசரிப்பர். மகிழ்ச்சிமிக்க இக்குடும்பங்கள் தங்களுடைய வீடுகளில் பரிசுத்த படங்களையும், நமதாண்டவருடையவும், தேவமாதாவுடையவும், அர்ச்சியசிஷ்டவர்களுடைய சுரூபங்கள் மற்றும் படங்களையும் வைத்து, தங்களுடைய இல்லங்களை பரிசுத்த ஸ்தலங்களாக மாற்றியிருப்பர். சர்வேசுரனை நம்பி

அவரை தமது கர்த்தாவாக ஏற்றுக்கொண்டிருக்கும் தகப்பன், அக்குடும்பத்தின் தலைவருக்குரிய அலுவல்கள் அனைத்தை யும் மிகச் சிறந்த விதத்தில் நிறைவேற்றும் ஆற்றலைப் பெற்றிருப்பார். தமது பிள்ளைகளின் மட்டில், ஆண்டவர் தமக்குக் கொடுத்த பொறுப்புகளை நன்கு அறிந்தவராக, அவர் தமது சொந்த நன்மாதிரிகையின் மூலம் நல்லொழுக்கப் புண்ணியங்களை தமது பிள்ளைகளிடம் ஏற்படுத்துவார். தேவமாதாவையே தமது முன்மாதிரி கையாகக்கொண்டு, அக்குடும்பத்தில் தாயானவள், தனது பிள்ளைகளின் ஆத்தும, சரீர வளர்ச்சியைப் போஷிக்கும் உத்தமமான சிநேகத்தையும் பொறுமையையும் கொண் டிருப்பாள்.

தங்களுடைய ஜீவியத்தின்மூலம் சர்வேசுரன் மேல் தாங்கள் கொண்டிருக்கும் விசுவாசத்திற்கு சான்று பகரும், மகிழ்ச்சிமிக்க அக்குடும்பத்தின், தாயும் தந்தையும் தங்களுடைய பிள்ளைகளுக்கு எந்த வகையான கல்வி முறையைக் கற்பித்து, அவர்களை எப்படி உருவாக்குவது என்பதை தீர்மானிப்பதில், அவர்கள் அதிக நேரம் எடுத்துக் கொள்ள மாட்டார்கள். அதில் யாதொரு குழப்பமும் அடைய மாட்டார்கள். அதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை அவர்கள் ''சர்வேசுரன், பெற்றோர்களாகிய நாம் என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறார்?'' என்று அவர்கள் தங்களையே வினவுவர். இவ்வாறு, சர்வேசுரனு டைய திருவுளத்தை அறிந்து அதைப் பின்பற்ற இப் பெற்றோர்கள் முயலும்போது, இத்தகைய அணுகுமுறை யாதொன்றும் இல்லாத பெற்றோர்களை ஆட்கொள்ளும் குழப்பத்திலிருந்து, விடுபட்டு மனத்தெளிவடைவர்.

திவ்விய கர்த்தரை வழிபடும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகள், தாங்கள் எங்கு, எப்படி, இருக்கிறோம் என்பதை அறிவர். சிருஷ்டிகரை வணங்கி ஆராதிக்கும்படி, அவர் களுக்குக் கற்பிக்கப்படுகின்றது. கடவுளுக்கு சங்கை செய்யும் அதே நேரத்தில், இவ்வுலகின் அதிகாரிகளுக்கும் மதிப்பளிக்கவேண்டும் என்பதையும் அவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். அவர்கள், தங்களுடைய நல்லொழுக்க ஜீவித்திற்கு எவையெல்லாம் ஏற்புடையவை என்றும், எவையெல்லாம் விலக்கப்பட்டவை என்றும் நுட்பமாக அவர்கள் கற்றறிந்து கொள்கிறார்கள். இப்பிள்ளைகள், வேதத்தைப்பற்றியும், வேதசத்தியங்களைப் பற்றியும் கற்றறியும்போது, தங்களுடைய குற்றம் ஒவ்வொன்றுக்கும் தண்டனைக் கண்டிப்பாக உண்டு என்பதை, தங்களுடைய இளம்பிராயத்திலேயே, அறிந்துகொள்கிறார்கள். இவ்வா றாக, தங்களுடைய ஜீவியகாலம் முழுவதற்குமாக, அவர் களை நல்லொழுக்க ஜீவியத்திற்கு, இட்டுச்செல்லக் கூடிய தலைமையான ஒழுக்கநெறியைக் கற்றறிந்து கொள்கின் றனர்.

(தொடரும்)

# நிறைவேறிய தீர்க்கதரிசனம்!

அன்று காலை பங்கு விசாரணைக்கு வந்த மேற்றிராணியார் வந். சார்தோரி ஆண்டகை சில குருக்களோடு உரையாடிக்கொண்டிருந்தார். அவரை நோக்கி விரைந்து வந்த ஒரு சிறுவன் அவருக்கு மரியாதை செலுத்தியபின் ''ஆண்டகையே! ஏன் சிறுவர்கள் புதுநன்மை வாங்க நீண்ட காலம் காத்திருக்க வேண்டும்?'' என்று கேட்டான். அக்காலத்தில் சிறுவர்கள் புதுநன்மை வாங்க 14 வயது கடந்திருக்க வேண்டும் என்பது திருச்சபை ஒழுங்கு! அவனை அன்போடு பார்த்த ஆயர், ''உனக்கு என்ன வயதாகிறது?'' என்று கேட்க, அவன் ''11 வயது'' என்றான். ''நல்லது. இந்த சிறு வயதில் திவ்விய நன்மையைப் போன்ற உந்நதமான கொடையினை உன்னால் சரியாக புரிந்துக்கொள்ள முடியாது, அதனால் தான்!'' என்று பதில் அளித்தார் மேற்றிராணியார்.

அதற்கு உடனே சிறுவன், ''நற்கருணை அப்பத்தில் சேசு இருக்கிறார். அவர் எனது உள்ளத்திற்குள் வர விரும்புகிறார் என்பதுதான் எனக்குத் தெரியுமே. இதை தவிர வேறு எதுவும் இருக்கிறதா? ஆண்டகையே!'' என்று கேட்டான். அந்த பதிலை சற்றும் எதிர்பாராத ஆயர் ஒரு கணம் திகைத்தவராய், பின் புன்முறுவலோடு ''ஆம்! நீ சொல்வது சரிதான். திருச்சபையின் ஒழுங்கை என்னால் மாற்ற முடியாதே. நீ வேண்டுமானால் பாப்பரசரை போய் பார்த்துக் கேளேன்'' என்று கூறினார். அதில் கேலி தொனித்தது. ஆனாலும் சிறுவன் விடுவதாயில்லை. உடனே ''என்னால் உரோமைக்குச் செல்ல முடியாது!. அதுதான் அதிக தூரத்தில் இருக்கிறதே'' என்று அப்பாவியாய் பதிலளித்தான்.

அவனது விவேகத்தைக் கண்டு வியந்த மேற்றிராணியார் பங்கு குரு பக்கமாய் திரும்பி ''இந்த சிறுவன் யார்?'' என்று கேட்க, அவர், ''இவன் எங்கள் ஊர் தபால்காரர் சார்த்தோவின் மகன். இவனுக்கு லத்தீன் மொழி தெரியும். குருவாக விரும்புகிறான்'' என்று பதிலளித்தார்.

அதைக் கேட்டு இன்னும் வியந்துபோன ஆயர் சிறுவனிடம், ''என்ன! குருவாக விரும்புகிறாயாக்கும்?!'' என்று அன்போடு கேட்டார். அதற்கு ''ஆம்! ஆண்டகையே'' என்று தாழ்ச்சியோடு பதிலளித்தான் சிறுவன்.

அவனது பதிலில் இருந்த ஆவலைக் கவனித்த ஆயர், ''மிகவும் சரி! ஒருவேளை நீ பாப்பானவராவாய்!'' என்று சிரித்தவர், பின்னர், ''அப்போது இந்த ஒழுங்கை மாற்றிக் கொள். சரியா?'' என்று கூறி ஆசீர்வதித்தார். சிறுவன் ஏமாற்றத்தோடு திரும்பினான். ஆனாலும் அவனது ஞான அறிவை முன்னிட்டு மறுவருடமே புதுநன்மை வாங்க ஆயர் உத்தரவு வழங்கினார்!

யார் அந்த சிறுவன்? அன்று மேற்றிராணியார் கூறியது போலவே அந்த சிறுவன் குருவாகி, பாப்பானவரானான்! சிறுவர்கள் புதுநன்மை வாங்கும் வயதைக் குறைத்து உத்தரவிட்டு ''நற்கருணையின் பாப்பரசர்'' என்று சிறப்பு பெயர் பெற்றார். அந்த சிறுவன்தான் அர்ச். 10-ம் பத்திநாதர்!

# அர்ச். பத்தாம் பத்திநாதரின் திருச்சபையைக் குறித்தான ஆவல்கள்!

வந். மேற்றிராணியார் திஸ்ஸியர் தே மலரே ஆண்டகையவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்தின் தமிழாக்கம் இங்கே வெளியிடப்படுகிறது. இந்தப் பிரசங்கம் 2003–ம் ஆண்டு நவம்பர் 16–ம் நாளன்று பிரான்ஸ் நாட்டு கோல்மா நகரில் அர்ச். ஜோசப் இல்லத்தில் நிகழ்த்தப்பட்டது. ஆர்.)

## (7) மரியாயின் மீதான பக்தி!



"**Ad Diem Illum**" என்ற அர்ச்.10- ம் பத்திநாதரின் சுற்றுமடல் பரிசுத்த கன்னிகையை மையமாகக் கொண்டிருக்கிறது. சேசுநாதரின் மேலுள்ள பக்திக்கு குறை வந்துவிடுமோ என்று தவறாகக் கொள்ளும் பயத்தினால் மரியாயின் மீதான உயர்ந்த மேலான பக்தியை வைக்கப் பயப்படுகிற மன சஞ்சலமுடைய பக்தர்களின் குறைபாடுகளை இச்சுற்று மடல் திருத்தி சரிசெய்கிறது. தாயானவள் மேன்மைபடுத்தப் படுவதனால் மகன் இழிவுப்படுத்தப்படுவாரா? அல்லவே! பரிசுத்த கன்னிமரியாயை சங்கிப்பது அவர்களுடைய திருக்குமாரனை சங்கை செய்வதற்கு மேலான வழியல்லவா!

சேசுநாதருக்கு முழுவதும் சொந்தமாயிருக்கும்படியாக மரியாயிக்கு தன்னை ஒப்புக்கொடுப்பதில் எவரும் அளவிற்கு மீறிய தைரியத்தை கொண்டிருப்பதாக நாம் சொல்லிவிட முடியாது (குறை கூற முடியாது). எனவே இதில் அளவை மிஞ்சி விடுவோமோ என்று ஒருவரும் பயப்பட தேவையில்லை. பரிசுத்த கன்னிமாமரி சேசு நாதரை நம்மிடமிருந்து மறைத்துக்கொள்ளும் திரையல்ல! அவர்கள் அவருடைய எதிரொலியாய் இருக்கிறார்கள். அர்ச். லூயிஸ் மரி தே மோன்ஃபோர்ட் சொல்லுவதுபோல, "நீ மரியா என்று கூவினால் அவர்கள் 'சர்வேசுரன்' என்று பதிலுரைக்கிறார்கள். நீ மரியே என்று கூவினால் 'சேசு' என்ற சப்தமே எதிரொலிக்கிறது; அல்லாமலும் மரியே என்றல்ல!". மாதா வழியாக செல்லுவது நாம் ஆண்டவரை அடைவதற்கு எளிமையான, நிச்சயமான வழி என்று அர்ச். 10-ம் பத்திநாதர் சொல்லுகிறார்.

வியக்கத்தக்க இப்போதனைக்கு மாறாக, பாப்பானவர் 2-ம் அருள் சின்னப்பர் எழுதிய மடல் வருந்தத்தக்க போதனைகளைக் கொண்டிருக்கிறது. இம்மடல் அர்ச். லூயிஸ் மரி தே மோன்ஃபோர்ட்டின் சில வாக்கியங்களை மேற்கோள்களாகக் கொண்டிருந்தாலும், கத்தோலிக்கர்கள் மாதாவிற்கு முழு சங்கை மரியாதையைக் கொடுப்பதால், ஆண்டவருக்கு மரியாதை குறைவை உண்டாக்குகிறது என்ற பயத்தை வெளிப்படுத்துகிறது. ஆகவே இப்பாப்பானவர் ஜெபமாலையை இன்னும் அதிகமாய் கிறீஸ்துவை மையமாகக் கொண்டதாக (Christological) மாற்ற விரும்பினார். கீழ்வரும் வரிகளில் அதை அவர் கூறினார்: "...கிறீஸ்துவை மையமாகக் கொண்டிருப்பதை ஆழப்படுத்த, ஜெபமாலையில் மேலும் சில தியானங்களை, ஆண்டவருடைய பகிரங்க வாழ்வில் சில முக்கிய நிகழ்வுகளை சேர்த்துகொள்வது பொருத்தமானதே" (ஒளியின் இரகசியங்கள்) §19.

இதனுடைய அர்த்தம் என்ன? ஜெபமாலைப்பற்றிய மடலில் மாதா நம் ஆண்டவருக்கு ஏதோ தடையாக இருப்பது போல மரியாயைவிட சேசுநாதரைப்பற்றியே அதிகம் சொல்லப்படுகிறது. அது மரியாயின் மீதான பக்திக்கு பொருத்தமில்லாத வார்த்தை! எனவேதான் ஜெபமாலையை "கிறீஸ்துவை மையமாகக் கொள்தல்" என்ற இக்கருத்தை நாம் ஏற்றுக்கொள்வதில்லை. புதிய முறையான ஜெபமாலையை நாம் சொல்லுவதுமில்லை. பாரம்பரிய முறையையே கடைபிடிக்கின்றோம். கிறீஸ்துமையம் என்ற ஒரு வழிமுறையின் உதவியின்றி மாதா, தானாகவே சேசுவிடம் இட்டுச்செல்கிறார்கள் என்பதில் நாம் ஊன்றியிருக்கிறோம்.

பிரியமுள்ள விசுவாசிகளே, மேற்கூறியவைகளெல்லாம் அர்ச். 10-ம் பத்திநாதருடைய வேலைகள். இந்த உன்னதமான சுற்றுமடல், போதிக்கின்ற மரியாயைப்பற்றிய சத்தியங்களான: சர்வேசுரனுடைய தாய், மனிதர்களுடைய தாய், இணை இரட்சகி, மத்தியஸ்தி போன்ற போதனைகளுக்காக அவருக்கு நாம் நன்றி சொல்லவேண்டும்.

அதோடு, இப்படிப்பட்ட பாப்பானவரை நமக்கு தந்தருளியதற்காக நாம் சர்வேசுரனுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். இக்கொள்கைகளுக்கு பிரமாணிக்கமாய் நாமிருக்க வேண்டிய வரப்பிரசாதத்தை இன்று நாம் கேட்போம். நன்றியறிதலின் ஒரு விளைவு என்னவென்றால், நாம் பெற்றுக்கொண்ட நல்ல கொள்கைகளுக்கு பிரமாணிக்கமாக இருப்பது; திருச்சபையின் அழகிற்கு - சௌந்தரியத்திற்கு நாம் செய்யவேண்டியவைகளில், சர்வேசுரனை நோக்கிய ஒழுங்கு கிரமத்தின் மட்டில், முழுமையான விசுவாசத்தை உறுதிப்படுத்துவதில், திருச்சபையினுடைய பரிசுத்ததனத்தில், குறிப்பாக நமது ஆத்துமத்தின் நலன்களை குறித்தான விஷயத்தில் நாம் கவனகுறைவாக இருத்தல் ஆகாது. இக்காரியங்களில் தேவதாயின் மத்தியஸ்தத்தை நாம் நாடுவோம்! ஆமென்.

– நிறைவுற்றது.

# குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்

## - அதிமேற்றிராணியார் மிக வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை -

(கடந்த 42 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் சாதாரண விசுவாசிகள் செய்வதறியாமல் திகைத்துபோய் உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டும் விடிவெள்ளியாக அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை திகழ்கிறார். அவர் எழுதிய "குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு ஓர் திறந்த மடல்" என்ற நூலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இது நிச்சயமாக குழம்பிப் போயிருக்கும் கத். மக்களின் மனங்களில் எழும் சந்தேகங்களுக்குப் பதிலாக அமையும் என்பதில் ஐயமில்லை. – ஆசிரியர்)

### (9) புதிய குருக்கள் (தொடர்ச்சி)

கடந்த 20 வருடங்களாக (இப்புத்தகம் எழுதப்பட்டு ஏற்கனவே 20 வருடங்கள் ஆகிவிட்டன - ஆர்.) திருச்சபையில் நடைமுறைப்படுத்தப்படும் நவீன முறைகளைப் பின்பற்றினால், "2000 ஆண்டில் இன்னும் குருக்கள் இருப்பார்களா?" என்ற கேள்விக்கு, "இல்லை" என்ற பதில்தான் கூற முடியும். ஆனால் உண்மையான விசுவாச சத்திய கருத்திற்கு - சிந்தனைக்கு திரும்பினால், குருமடங்களிலும், துறவற சபைகளிலும் தேவ அழைத்தல்கள் பெருகும்.



ஒரு குருவானவருக்கோ அல்லது ஒரு கன்னியாஸ்திரிக்கோ மேன்மையையும், அழகையும் கொண்டு வருவது எது? - "தன்னையே பலியாக நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துவோடு பீடத்தில் ஒப்புக் கொடுப்பதே" ஆகும். அப்படி இல்லாவிட்டால் துறவற வாழ்வு அர்த்த மற்றதாகிவிடும். இக்கால இளைஞர்கள் முந்தியகால இளைஞர் களைப் போல - "தங்களையே கையளித்து ஒப்புக்கொடுக்கும்" தாராள குணமுடையவர்களாய்தான் இருக்கிறார்கள். நாம் வாழ்ந்துகொண் டிருக்கும் இக்காலமே குறைபாடு உள்ளதாக இருக்கின்றது.

ஒன்றாய் சேர்த்துக் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் அடித்தளம் தாக்கப்பட்டால் முழுக் கட்டிடமும் அழிவுக்குள்ளாகிறது. (ஒன்றோ டொன்றாய் பிணைக்கப்பட்டிருக்கிற) மெய்யான திவ்விய பலிபூசை இல்லையென்றால் குருக்கள் இல்லை. குருத்துவ அபிஷேக சடங்கில் மாற்றங்கள் வருவதற்கு முன் மேற்றிராணியார், "சர்வேசுரனுக்கு பரிசுத்த பலியை ஒப்புக்கொடுக்கும் வல்லமையை, வாழ்வோருக் காகவும், இறந்தோருக்காகவும் திவ்விய பூசையை நிறைவேற்றும் வல்லமையை சர்வேசுரனுடைய பெயராலே பெற்றுக்கொள்" என்று கூறுவார். இதற்கு சற்று முன்பு மேற்றிராணியார் குருப்பட்டம் பெறுபவரின் கரங்களை பின்வரும் வார்த்தைகளைக் கூறி ஆசீர்வதிப்பார்: "இவை ஆசீர்வதிப்பவை யாவும் ஆசீர்வதிக்கப்படக் கடவன; இவை வசீகரம் பண்ணுபவையெல்லாம் வசீகரமாக்கப்பட்டு பரிசுத்தமாகக் கடவன". குருவானவருக்கு அளிக்கப்படும் 'வல்லமை' தெளிவாகக் குழப்பத்திற்கு இடமின்றி எடுத்துரைக்கப்படுகிறது: "(ஆண்டவரே) உமது மக்களின் இரட்சண்யத்திற்காக, (இவர்கள்) தங்களுடைய பரிசுத்த ஆசீர்வாதத்தால் அப்பத்தையும் இரசத்தையும் வசீகரமாக்கி, உம்முடைய திவ்விய குமாரனின் சரீரமாகவும், இரத்தமாகவும் மாற்றுவார்களாக".

மாற்றப்பட்ட பின்பு இப்போது புதிய முறையில், "நவீன ஆயர், பரிசுத்த மக்கள் கொண்டு வரும் காணிக்கையை கடவுளிடம் அளிக்கும்படி பெற்றுக்கொள்வீராக". ஆயர், நவீன புது குருக்களை, சேசுக்கிறீஸ்துவின் பதிலாளாகிற பிரதிநிதித்துவ குருத்துவம் (Ministerial Priesthood) பெற்றவராகவும், பலியை ஒப்புக்கொடுப்பவராகவும் ஆக்குவதற்குப் பதிலாக, 'கடவுளின் இடை மனிதராக' ஆக்குகிறார். இந்த நவீன கருத்தே திருச்சபைக்கு முழுவதும் வேறுபாடானதாகும்.

பரிசுத்த திருச்சபையில், குருவானவர் குருத்துவம் என்ற தேவதிரவிய அநுமானம் அளிக்கும் விசேஷ முத்திரை பெற்றவராகவே எப்பொழுதும் கருதப்பட்டு வந்திருக்கிறார். இருப்பினும், (தமது மாற்று கருத்துக்காக) - 'தண்டனைக்கு உட்படாத' ஒரு மேற்றிராணியார் எழுதுவதோ - குரு ஒரு சாதாரணமான விசுவாசி செய்யாததை செய்பவர் அல்ல. குரு, ஒரு விசுவாசியைவிட அதிகமாக 'மறு கிறீஸ்து' போன்றவர் அல்லர்''. இந்த மேற்றிராணியார், 2-ம் வத். சங்கத்திற்கு பின் நிலவும் போதனைகள் மற்றும் வழிபாட்டு முறைகளின் அடிப்படையில் இந்த முடிவிற்கு வந்துள்ளார்!

பொது நிலையினரின் **பொது** குருத்துவத்திற்கும் குருவானவருடைய **பிரதிநிதித்துவ** குருத்துவத்திற்குமுள்ள வேறுபாடும், சம்பந்தமும் குழப்பத்திற்கு உள்ளாக்கப்படுகிறது. பதிதங்கள் நிறைந்த டச் ஞான உபதேசம் (Dutch Catechism) பற்றி விசாரித்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க ஏற்படுத்தப்பட்ட கர்தினால்மார்களைக் கொண்ட குழு ''(குருக்களின்) பிரதிநிதித்துவ குருத்துவம் கிறீஸ்துநாதரின் குருத்துவத்தில் பங்குகொள்வதினுடைய மேன்மை - உயர்வு, விசுவாசிகளுடைய (பொது நிலையினருடைய) பொது குருத்துவத்திலிருந்து, பங்கு பெறும் அளவில் மாத்திரமின்றி அதனுடைய உட்பொருளிலும் (essence) வேறுபட்டிருக்கின்றது'' என்று கூறியது. இவ் விஷயத்தில் கருத்துவேறுபாடு கொள்வதானது பதிதர்களுடைய (புரட்டஸ்டாண்டாக) பக்கத்தில் சேர்ந்து கொள்வதற்கு போதுமானதாயிருக்கிறது.

கத்தோலிக்க திருச்சபையின் மாறாத போதனையோ என்னவென்றால், குருவானவர் பரிசுத்தமும் அழியாதது மான முத்திரையைப் பதிக்கப்பெறுகிறார். "Tu es sacerdos in aeternum... நீர் நித்தியத்திற்கும் குருவாயிருக்கிறீர்". அவர் என்ன செய்தாலும், சம்மனசுகளுக்கு முன்பாக, சர்வேசுரனுக்கு முன்பாக நித்தியத்திற்கும் அவர் குருவாகவே இருப்பார். அவர் தனது அங்கியை தூர எறிந்தாலும், கொடூரமான அக்கிரமங்களைச் செய்தாலும், அது அவருடைய அந்தஸ்தை மாற்றாது. குருத்துவம் என்ற தேவதிரவிய அநுமானம் அவருடைய இயல்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும். ஒரு குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட குருக்கள், ஒரு குறுகிய காலத்திற்கு மாத்திரம் குருக்களாக இருந்துவிட்டு பின் அவ்வந்தஸ்தை விட்டுச்செல்ல உத்தேசித்திருப்பவர்கள் நமக்கு வெகு தூரமானவர்கள். பரிசுத்தமற்ற இப்படிப்பட்டக் குருத்துவ அலுவல் குறித்தான கண்ணோட்டம் இயல்பாகவே குருத்துவ விரத்தத்துவத்தை பற்றிய கேள்விகளை எழுப்புகின்றன. உரோமை ஆசிரியம் பலமுறை எச்சரித்திருந்த போதும், குருத்துவ விரத்தத்துவத்தை அழித்துவிடக் கோரி கூக்குரலிடும் கூட்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஹாலந்து நாட்டில், இது பற்றிய உத்திரவாதம் வரும்வரை குருப்பட்டம் பெற மறுக்கும் குருமாணவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்! பரிசுத்த ஸ்தானம் இதுகுறித்து மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கோரிய ஆயர்களின் பெயர்களை இங்கு நான் தர விரும்பவில்லை.

திவ்விய பலிபூசையைப் பற்றியும், குருத்துவத்தினுடையவும் உண்மைகளை குருக்கள் சரியாக அறிந்து இருந்தால், இந்த பிரச்சினையே எழுந்திருக்காது. இவ்விரண்டு உண்மைகளை அறிந்திருந்தால் தானாகவே அதன் காரணங்கள் விளங்கும். இக்காரணங்களுக்காகவே அர்ச். மரியம்மாள் கன்னியாக இருந்தார்கள்: நமதாண்டவரை தமது உதரத்தில் கருத்தாங்கிய மரியம்மாள் கன்னியாக இருப்பது மிக சரியானதும் பொருத்தமானதுமாகும். அதுபோலவே, குருவானவர் திவ்விய பலிபூசையில் வசீகர வார்த்தைகளைச் சொல்லும் போது கடவுளை கீழே பூமிக்கு கொண்டுவருகிறார். சுத்த அரூபியாயிருக்கின்ற சர்வேசுரனோடு குருவானவர் கொண்டிருக்கிற ஐக்கியத்தின் காரணமாக அவர் விரத்தனாக இருப்பது நீதியானதும் சரியானதும் மிகப்பொருத்தம் வாய்ந்ததாக இருக்கிறது.

கீழை நாடுகளில் குருக்கள் திருமணம் செய்துள்ளார்கள் என்று சிலர் ஆட்சேபிக்கலாம். நாம் நம்மையே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். இவை பொறுத்துக் கொள்ளப்படுகின்றதேயொழிய ஆதரிக்கப்படுவதில்லை. **(இப்பழக்கம் கீழைத் திருச்சபையில் வந்த பொழுது அவர்கள் உரோமைய திருச்சபையோடு இணையாதிருந்தார்கள் – ஆர்.)** கீழை நாட்டு மேற்றிராணிமார்கள் திருமணம் செய்துகொள்வதில்லை. முக்கிய பதவிகளை வகிப்பவர்களும் திருமணம் செய்து கொள்வதில்லை. அவர்கள் குருத்துவ விரத்தத்துவத்தை மதித்து போற்றி வருகிறார்கள். திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் எழுந்தருளின கணத்திலிருந்து அப்போஸ்தலர்களால் கடைபிடிக்கப்பட்ட பாரம்பரிய வழக்கங்களில் ஒன்றாக இது இருக்கிறது. அர்ச். இராயப்பரைப் போல் ஏற்கனவே திருமணம் செய்திருந்த அப்போஸ்தலர்கள் தங்கள் மனைவியோடு வாழ்ந்தனர். ஆனால் மனைவியை 'அறியாதிருந்தனர்'.

சமூகப் பணி அல்லது அரசியல் பணி என்ற மாயைகளில் வீழ்ந்த குருக்கள் அனைவரும் தவறாமல் திருமணம் செய்கிறார்கள். இவையிரண்டும் சேர்ந்தே செல்கின்றன. 'இக்கால சூழ்நிலையே எல்லா வகை ஒழுங்கு முறைகளையும் மீறக் காரணமாகவுள்ளது என்றும், இன்றைய சூழ்நிலையில் கற்போடு வாழ்வது முடியாத காரியம்; எனவே துறவிகளின் ''கற்பு'' என்னும் வார்த்தைப் பாடு காலத்திற்கு ஒவ்வாதது என்று நம்மை நம்ப வைக்க முயற்சிக்கிறார்கள்'. கடந்த 20 வருடங்களில் ''குருத்துவத்தை'' காலத்திற்கேற்ப மாற்றுவதாகக் கூறிக்கொண்டு, ''குருத்துவத்தின்''மேல் நடத்தப்பட்ட தாக்குதல்கள் அழிவுக்கு இட்டுச் செல்கின்றன. இருப்பினும் குருக்கள் இல்லாத திருச்சபையை நினைக்கக்கூட முடியாது. ஏனென்றால், திருச்சபை குருத்துவ அடிப்படையில் உள்ளது.

இந்த துயரம் நிறைந்த நாட்களில் பொது நிலையினருக்கு எந்தக் கட்டுப்பாடுமில்லாத ஆண் பெண் உறவையும், குருக்களுக்கு திருமணத்தையும் தேடுகிறார்கள். இந்த முரண்பாட்டின் தெளிவான நோக்கம் 'கிறீஸ்தவ சமுதாயத்தை அழிப்பதுதான்' என்று நீங்கள் கண்டால், நீங்கள் உள்ளதை உள்ளபடியே காண்கிறீர்கள். உங்கள் கணிப்பும் சரியானதே!

(தொடரும்)

# செய்திகள்

## ★ குருமட பயிற்சி !

கத்தோலிக்க கல்வி சம்பந்தமான சங்கத்தின் செயலாளரான அதி. மே. வந். ஜான் லூயி ப்ருக்கெஸ், குருக்கள் ஆண்டின் இறுதியில் குரு மாணவர்களின் பயிற்சி குறித்து சுருக்கமான, அதே வேளையில் தெளிவும் உறுதியுமான ஆவணத்தை தயார் செய்வதற்கு வத்திக்கான் திட்டமிட்டுள்ளது என்று கூறினார். மேல் நாட்டு இளைஞர்கள் உயர் தொழில் கல்வி பெற்றுள்ள போதிலும் பொது நாகரீகத்திலும் இன்னும் அதிகமாய் கிறீஸ்துவ நாகரீகத்திலும் குறைவாய் இருக்கிறார்கள் என்று கூறி வருந்தினார். இக்குறையை நீக்க குருமட கல்வி தொடங்குமுன் ஓராண்டு தயாரிப்பு பயிற்சி கொடுக்கப்படுமென்று கூறினார்.

## ★ Motu Proprio "Ecclesiae Unitatem"

மார்ச் 10, 2009 அன்று உலக மேற்றிராணியார்களுக்கு தான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டவாறு பரி. பாப்பானவர் கடந்த ஜுலை மாதம் 10–ம் தேதி "Ecclesiae Unitatem" என்ற தன்னிச்சை மடலின் மூலமாக எக்ளேசியா தேயி கமிஷனை விசுவாச சத்தியங்கள் சம்பந்தமான சங்கத்துடன் இணைத்துள்ளார். அர்ச். 10–ம் பத்திநாதர் குருக்கள் சபை குறித்தான பிரச்சினைகள், அடிப்படையில் வேத சத்திய போதனைகள் சம்பந்தமானதாக இருக்கிறபடியால்தான் இந்த முடிவை எடுத்திருப்பதாக பரி. பாப்பானவர் கூறியுள்ளார்.

## ★ கர்தினாலின் எச்சரிப்பு !

உரோமைய திருவழிபாடு மற்றும் தேவதிரவிய அனுமானங்களுக்கான சங்கத்தின் தலைவராக இருந்து ஓய்வுபெற்ற வந். கர்தினால் அரின்ஸ், வழிபாட்டில் புகுத்தப்படும் விநோதமான செயல்கள், தவறான உள்நாட்டுமயமாக்குதல், திருவழிபாட்டு 'நடனம்' இவைகள் குறித்து ஆசிய மேற்றிராணிமார்களை எச்சரித்துள்ளார். மணிலாவில் நடைபெற்ற ஆசிய மேற்றிராணியார்களின் கூட்டமைப்பு கூட்டத்தில் பாப்பானவருடைய விசேஷ பிரதிநிதியாக பங்கேற்ற கர்தினால் அரின்ஸ், தேவநற்கருணை மட்டில் மெய்யான சங்கை, ஆராதனை ஏற்படுத்தும்படி கோரினார்.

## ★ மடு மாதா திருநாள் !



இலங்கையில் 30 ஆண்டு உள்நாட்டுப்போர் முடிவடைந்த நிலையில் ஆயிரக்கணக்கான கிறீஸ்தவர்கள் மடு மாதாவின் திருத்தலத்திற்கு சென்று வருகிறார்கள். இவ்வாண்டு கொழும்பு மேற்றிராசனத்தின் அதி. மேற்றிராணியாரான வந். மால்கம் ரஞ்சித் ஆண்டகை திருநாளின் போது 5 லட்சம் யாத்திரிகர்களை வரவேற்றார். உள்நாட்டு போர் காரணமாக 400 வருட பழமையான தேவமாதாவின் சுரூபம் பாதுகாப்பு கருதி இடம் மாற்றப்பட்டு, மீண்டும் 2008–ல் இத்திருத்தலத்திற்கு கொண்டுவரப்பட்டது.

## ★ பாரம்பரிய கத்தோலிக்கர்களின் திருயாத்திரை !

கடந்த ஆகஸ்ட் மாதம் 13, 14, 15ம் தேதிகளில், அர்ச். அல்போன்ஸா, முத். குரியாகோஸ் சவரா மற்றும் எர்ணாகுளத்திற்கு அருகேயுள்ள வல்லார்பாடம் அடைக்கல மாதா திருத்தலத்திற்கு பாரம்பரிய கத்தோலிக்கர்கள் திருயாத்திரையாக சென்று வந்தார்கள். அர்ச்சியசிஷ்ட பட்டம் வழங்கப்பட்ட பின் பரனஞ்ஞானத்திலுள்ள அர்ச். அல்போன்ஸாவின் திருத்தலத்திற்கு செல்லும் திருயாத்திரிகர்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்துள்ளது. இங்கு திருயாத்திரிகராக வரும் துறவற கன்னியர்களிடையே ஞான வாழ்வில் புதிய எழுச்சியுண்டாயிருப்பதைக் காணமுடிகிறது!

## ★ புதிய 5 ரூபாய் நாணயம் !

ஆகஸ்ட் மாதம் 24–ம் தேதி அர்ச். அல்போன்ஸாவின் நினைவாக புதிய 5 ரூபாய் நாணயத்தை மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி வெளியிட்டார். மத்திய அமைச்சரிடமிருந்து நாணயத்தைப் பெற்றுக்கொண்ட மேற்றிராணியார் மார் ஜோசப் பள்ளிக்கப்பரம்பில், "இது மத்திய அரசின் மேன்மையான செயல்களில் ஒன்று" என்று பாராட்டினார்.

## ★ புதிய பசிலிக்கா !

கேரள மாநில எர்ணாகுளம், அங்கமாலி சீரோ மலபார் மேற்றிராசனத்திலுள்ள அர்ச். ஜார்ஜியார் தேவாலயம் பசிலிக்கா அந்தஸ்திற்கு பரி. பாப்பானவரால் உயர்த்தப்பட்டுள்ளது.

*வுல்காத் புதிய ஏற்பாடு விரைவில் வெளிவரவிருக்கிறது!*

**நிதி பற்றாக்குறையினால் தாமதமாகும் நிலையை தவிர்ப்பதற்கு தங்களின் மேலான நன்கொடைகளை எதிர்பார்க்கிறோம்.**

# நீ ஏன் பாவசங்கீர்த்தனம் செய்வதில்லை?



ஒரு ஊரில் பொதுத்தியானம் நடந்தது. அது முடிவடைகிறதற்கு முந்தின நாள் வயோதிகன் ஒருவன் தயங்கித் தயங்கிப் பாவசங்கீர்த்தனத் தொட்டியை அண்டி, முழங்காலிலிருந்து, "சுவாமி, நான் பாவசங்கீர்த்தனம் பண்ணி நாற்பது வருஷங்கள் ஆயிற்று" என்று ஆரம்பித்துப் பாவங்களைச் சொல்லி முடித்ததும், குருவானவர் தன்னைக் கடுமையாகக் கண்டிப்பார் என்று மனதில்



எண்ணிக்கொண்டு, பெருமூச்சு விடலானான். ஆனால் அவன் எதிர்பார்த்ததற்கு முழுவதும் எதிரிடையாய், "மகனே, ஆக கடைசியாக நீ சர்வேசுரனிடம் திரும்பி வந்ததை முன்னிட்டு, இன்றிரவு பரலோகத்தில் சம்மனசுகள் ஆனந்தம் கொண்டாடுகிறார்கள்" என்று மொழிந்த குருவானவரின் சாந்தமான குரலைக் கேட்டு திகைப்பும், ஆச்சரியமும் அவன் உள்ளத்தில் எழும்பின; சந்தோஷமும் சமாதானமும் அவனை ஆட்கொண்டன. சம்மனசுகள் மாத்திரமன்று, சகல அர்ச்சியசிஷ்டவர்கள், பரி.கன்னி மரியம்மாள், சேசுவின் திருஇருதயம் மோட்சத்திலுள்ளவர்கள் எல்லோரும், நாம் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வதை அறிந்து ஆனந்தம் கொள்கிறார்கள். "தவம் செய்கிற ஒரு பாவியின் நிமித்தம் தேவதூதர்களுக்கு முன்பாக சந்தோஷமுண்டாகும்" (லூக். 15:10.) என்று நமது திவ்விய இரட்சகர் தாமே சொல்லியிருக்கிறார் அல்லவா? மோட்சவாசிகளுக்கு சந்தோஷத்தையும், நமது மனதிற்கு சமாதானத்தையும் அளிக்கக்கூடிய பாவசங்கீர்த்தனம் என்னும் தேவதிரவிய அநுமானத்தை நாம் அடிக்கடி உபயோகிக்காமலிருப்பதற்கு சிலர் சொல்லும் சாக்குப்போக்குகள் எவையென்று சற்றே ஆராய்ந்து பார்ப்போம்.

*1. நாம் செய்த பாவங்களுக்காகப் பச்சாத்தாபப் படாதிருப்பது ஒரு காரணம்.* கடந்த காலத்தில் நாம் கட்டிக்கொண்ட பாவங்களின் மட்டில் நமக்கு மெய்யான வெறுப்பும், தவறுதலை உணர்ந்ததின் பயனாகிய துக்கமும் இல்லாவிடில், நாம் பாவசங்கீர்த்தனம் செய்வதைவிடச் செய்யாதிருப்பதே மேல்; ஏனெனில், மனஸ்தாபமின்றிப் பாவசங்கீர்த்தனம் செய்வதினால், குளிக்கப் போய்ச் சேற்றை அள்ளிப் பூசிக்கொண்டதற்குச் சமானமாகும். ஆனால் பச்சாதாபப்படாத பாவியின் நிலைமை பயங்கரத்துக்குரியது என்று சொல்லவும் வேண்டுமோ? விஷப் பாம்பைக் கட்டி அரவணைத்துக்கொண்டு அமரிக்கையாயிருக்கக் கூடியவன் எவனாவது உண்டா? உயிருக்கு ஆபத்தான அந்தப் பாம்பை விடமாட்டேன் என்று சொல்கிறவனை மதிகெட்டவன் என்று மதிப்போமல்லவா? பச்சாத்தாபப்படாத பாவி நித்தியத்துக்கும் தன் ஆத்துமத்தை அக்கினியில் தள்ளி, ஆக்கினை அநுபவிக்க ஆயத்தமாயிருக்கிறான். இது எவ்வாறெனில், பாவ அந்தஸ்தில் சாக நேர்ந்தால், நித்தியத்துக்கும் நெருப்பில் கிடந்து வேகவேண்டுமென்று தெரிந்திருந்தும், அத்தகைய ஆக்கினைக்குக் காரணமான பாவத்தை விடமாட்டேன் என்று பிடிவாதமாயிருக்கிறான். இது எத்தகைய மதியீனம் என்போம். பாவப்பற்றுதலினிமித்தம் கல்நெஞ்சராயிருப்பவர்களின் தொகை வெகு சொற்பம் என்றே வைத்துக் கொள்வோம். பெரும்பான்மையோர் பலவீனத்தால் தவறிப்போகிறார்களென்றும், தாங்கள் செய்த அக்கிரமங்களைப்பற்றித் துக்கிக்கிறார்களென்றும் சொல்வது மிகையாகாது. ஆயினும், கெட்டுப்போன மனித சுபாவத்துக்கு விலக்கப்பட்ட கனி இனிப்பாய்த் தோன்றுவது சகஜம். பாவ அந்தஸ்தில் மரிக்க நம்மில் ஒருவரும் விரும்ப மாட்டோம்; எனினும், பாவமயக்கத்தால் மதிகெட்டு, ஆண்டவரே, எங்களை இரட்சியும், ஆனால் கொஞ்சம் பொறுத்துச் செய்யும் என்றாற்போல், பாவத்தை அறவே அகற்றிப்போட மனமின்றி, இன்னும் கொஞ்சக்காலம் பாவத்தில் சீவிக்க விரும்புகிறவர்கள் உண்டு. இவர்கள்தான் இப்போது என்ன ஆபத்து வந்துவிட்டது, அடுத்த வருஷம் பார்த்துக்கொள்ளலாம் என்று

காலத்தைக் கடத்திக்கொண்டு போகிறவர்கள். ஐயோ! பரிதாபம்! இவ்வாறு காலதாமதஞ் செய்கிறவர்களில் எத்தனையோ பேர், தாங்கள் நியமித்திருந்த அடுத்த வருஷத்தைக் காணாமல் இவ்வுலகத்தைவிட்டு மறைந்து போனார்கள். இதை அறிந்தும் அறியாதவர்களைப்போல் நடக்கலாமா?

2. குருவானவர் என்னைப்பற்றி என்ன நினைப்பார் என்ற பயம் சிலர் பாவசங்கீர்த்தனம் செய்யாதபடி தடையாய் நிற்கிறது. கடவுள் உன்னைப்பற்றி என்ன நினைக்கிறார் என்பதை யோசிக்கிறாயா? பாவஞ் செய்ய நீ வெட்கப்படவில்லை, துணிந்து செய்தாயே. இப்போது, சர்வேசுரனுடைய பிரதிநிதியிடம் அதை வெளிப்படுத்தி மன்னிப்படையத் துணிவு இல்லாமற் போவதேன்? குருவானவர் என்ன நினைப்பார் என்கிறாய். நீ நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்தால், அவர் சந்தோஷங் கொள்வார் என்று திட்டமாய் எண்ணிக்கொள். பாவச்சோதனை வேளையில் உன்னிடமிருந்து கூச்சம் நாணமெல்லாம் பிடுங்கிக்கொண்ட பசாசு, பாவ வினையைப் போக்கா வண்ணம் இப்போது உன்னிடம் கள்ளக் கூச்சத்தை உண்டு பண்ணுகிறது. வீண் கூச்சத்துக்கு இடங்கொடாமல் தைரியமாயிருக்கும்படி, தேவ வரத்தை மன்றாடு. குருவானவர் சிலவேளை உன்னைக் கடிந்து கொள்வார் என்று பயப்படுகிறாயோ? கண்டித்தால்தான் என்ன? நீ செய்த அக்கிரமங்களுக்கு, இந்தக் கண்டிப்பு பெரிய தண்டனையா? இதிலும் பன்மடங்கு தண்டனை பெறக் காரணமில்லையா? குருவானவர் தடி எடுத்து அடிக்க மாட்டார், சீறிச் சினந்து உன்னை அருவருக்க மாட்டார். வைத்தியன் வியாதியின் குணத்தைக் கவனித்துக் கசப்பான மருந்து அவசியமென்று கண்டால், அதை நோயாளிக்குக் கொடுப்பதுபோல், குருவானவர் உனக்குக் கசப்பான வார்த்தைகளைச் சிலவேளை சொல்லக்கூடும், சொல்லவேண்டியதிருக்கும். இது உன் நன்மைக்காக, உன் நடத்தையைச் சீர்திருத்திக்கொள்வதற்காகவன்றி, வேறல்ல. மருந்து கசப்பாயிருக்கிறதைக் கண்டு, நோயாளி அதை எறிந்து விடுவானா அல்லது அதைக் கொடுத்த வைத்தியனைக் குறை கூறுவானா? இல்லையே அவ்வாறே, நீயும் நடந்து கொள்ள வேண்டும். குருவானவர் சர்வேசுரனுடைய பிரதிநிதி என்பது உண்மை; ஆயினும், அவர் அரூபியல்ல, உன்னைப் போன்ற மனித சுபாவமுள்ளவர் என்பதை மறந்து போகாதே. மூன்று, நான்கு, ஐந்து மணி நேரம் தொடர்ந்து பாவசங்கீர்த்தனத் தொட்டியில் உட்கார்ந்து, பலவகைப்பட்ட கதைகளைக் கேட்டுக்கொண்டிருப்பது அல்லது பலர் சொல்லும் ஒரே வகைப்பட்ட குற்றங்களைச் சலியாமல் உற்றுக்கேட்டுக்கொண்டிருப்பது, மனித சுபாவத்துக்கு மிகவும் பொருத்தமானதென்று எண்ணுகிறாயோ? மணிக்கணக்காய்ப் பாவசங்கீர்த்தனம் கேட்பது, மதுர மொழிகளை உற்பத்தி பண்ணக்கூடிய அலுவல் அல்ல. அடிக்கடி பாவசங்கீர்த்தனம் பண்ணுகிற வழக்கம் உனக்கு ஏற்பட்டால், இதையெல்லாம் நன்கு உணர்ந்து, வீண் பயத்தை அகற்றிக்கொள்வதுமன்றி, குருவானவர் சொல்லுகிற வார்த்தைகள் கசப்பாகத் தோன்றினாலும், அவற்றால் உன் ஆத்தும நோய்க்குத் தகுந்த மருந்து கிடைத்ததென்று ஏற்றுக்கொள்வாய்.

(தொடரும்)

**தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்கள்:**

**பாளையங்கோட்டை:**
அர்ச். தமத்திரித்துவ ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**சிங்கம்பாறை:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201..

**கிறீஸ்துராஜபுரம்:**
கிறீஸ்துராஜா ஆலயம்,
தொலைபேசி எண்: 9442625158

**நாகர்கோவில்:**
அர்ச். தோமையார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 9442625158

**தூத்துக்குடி:**
அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம்:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 9442625158.

**திருச்சி :**
அர்ச். சூசையப்பர் சிற்றாலயம்
No-14/2, 3-வது மெயின் ரோடு
ஸ்ரீனிவாசா நகர், திருச்சி - 620 017.
தொலைபேசி எண்: 0431 - 2782798.

**சென்னை:**
அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்.
தொலைபேசி எண்: 044-22355389; 9791134344; 9445122353; 9444685103.
**ஞாயிறு பூசை நேரம் : மாலை 6.00 மணி**

**ஆர். என். கண்டிகை:**
ஜென்ம இராக்கினி ஆலயம்.
தொலைபேசி எண்: 9444122316.

*Salve Regina*
#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai – 627 002.
Ph: 0462-2586201; 2572389; 2572177 - Mobile: 9442625158.
e-mail: salvereginapress@gmail.com ***or*** salvereginapublications@gmail.com